# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 கார்த்திகை 8 வியாழக்கிழமை (23-11-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:294






யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக மாணவர்கள் பங்குபற்றிய கண்டனப் பேரணி ஒன்று நேற்று நகரில் இடம்பெற்றது.

இந்தப்பேரணி முடிவில் யாழ்.செயலகத்தின் முன்பாக கண்டனக் கூட்டம் ஒன்றும் நடந்தது. அதில் பங்கு பற்றிய மாணவர்களில் ஒரு பகுதியினரைப் படங்களில் காணலாம். (இ)

## நிமலராஜன், தமிழ்க்கைதிகள் படுகொலைகளுக்கு எதிராக

# பல்கலைக்கழக மாணவர் பெரும் கண்டனப் பேரணி!

### ஆக்ரோஷமான கோஷங்களுடன் மழையின் மத்தியிலும் நடைபெற்றது

யாழ்ப்பாணம்,நவம்பர்23

**பத்திரிகையாளர் நிமலராஜன் படுகொலை, பண்டாரவளையில் தமிழ்க் கைதிகள் கொன்று குவிக்கப்பட்டமை ஆகிய இரண்டு சம்பவங்களையும் கண்டித்து யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுப் பேரணி ஒன்றை நடத்தினர்.**

**பல்கலைக்கழகத்தில் பெரும் எண்ணிக்கையில் ஒன்று திரண்டு, அங்கிருந்து புறப்பட்டு, யாழ்.நகரின் முக்கிய வீதிகள் ஊடாக ஆக்ரோஷமான கோஷங்களை எழுப்பியவாறு கடும் மழையின் மத்தியிலும் மாணவர்கள் யாழ்.செயலகத்தைச் சென்றடைந்தனர்.**

செயலகத்தின் முன்னால் திரண்ட மாணவர்கள் அங்கு கண்டனக் கூட்டம் ஒன்றை நடத்தியதோடு ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்றையும் யாழ். அரசாங்க அதிபரிடம் கையளித்தனர்.

சுமார் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்ட இந்தப் பேரணி முற்பகல் 9.45 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக முன்

(10ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் அமைச்சர் ஹெய்னின் விஜயத்தை ஆட்சேபித்து சிஹல உறுமய ஆர்ப்பாட்டம்

கொழும்பு,நவ.23

கொழும்பு வந்துள்ள பிரிட்டிஷ் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் பீற்றர் ஹெய்னுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரிட்டிஷ் கவுன்சிலுக்கு முன்பாக சிஹல உறுமய நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தியது.

நேற்றுப் பிற்பகல் 4 மணிமுதல் ஒரு மணிநேரம் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் புத்த பிக்குகள் உட்பட சுமார் 500 பேர் பங்கு பற்றினர்.

பிரிட்டிஷ் தூதரகத்தை மூடிவிட்டு தூதரக அதிகாரிகள் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என்றும்-

இலங்கை விவகாரத்தில் பிரிட்டன் தலையிடக்கூடாது என்றும்-ஆர்ப்பாட்டக்காரர் கோஷம் எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தை முடித்துவைத்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் திலக் கருணரத்தின கூறியதாவது:-

லண்டனில் புலிகளைத் தடை செய்யுமாறு இலங்கை அரசு கேட்டு வருகின்றது. ஆனால் அதனைச் செய்யாத பிரிட்டிஷ் அரசு இலங்கை விடயத்தில் தலையிடுகின்றது.

எமது உள்நாட்டு விடயத்தை நாமே தீர்ப்போம். இந்த விடயத்தில் தலையிட்டு சிங்கள இனத்தையும், தமிழ் இனத்தையும் பிரிக்க வேண்டாம் என்று நாம் கேட்டுக் கொள்கின்றோம். இரு இனங்களும் சகோதரர் போல வாழ அனுமதிக்க வேண்டும்- என்றார். (இ-3-8)

## வார இறுதியில் 'லங்காமுடித்த' கப்பல் சேவை

யாழ்ப்பாணம்,நவ.23

யாழ்ப்பாணத்துக்கும் - திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவையில் இந்த வார இறுதி முதல் 'லங்காமுடித்த' ஈடுபடுத்தப்படவுள்ளது.

வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கின் தமிழ் விவகாரங்களுக்கான அமைச்சு நேற்று விடுத்த பத்திரிகைச் செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பயணிகள் கப்பல் சேவையில்

(10ஆம் பக்கம் பார்க்க)

## அரசுப் பிரதிநிதிகள் இருவர் இவ்வாரம் லண்டனுக்கு!

### புலிகளுடன் முதல் கட்டப் பேச்சு?

கொழும்பு,நவ.23

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான முதல் கட்டப் பேச்சுக்களில் பங்குபற்றுவதற்காக இரு அரசுப் பிரதிநிதிகள் கொண்ட குழு ஒன்று இவ்வார இறுதியில் லண்டன் செல்லவுள்ளதாக சர்வதேச செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

இந்தக் குழு செல்லும் போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் லண்டனுக்குத் தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு செல்லவுள்ளார் எனவும் அந்த ஏஜென்ஸி மேலும் தெரிவித்தது.

அரசு குழுவுக்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் குழுவுக்கும் இடையிலான சந்திப்பு ஒரு வரையறைக்குட்பட்டதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம்- இந்த விவகாரத்தில் ஈடுபட்டுள்ள நோர்வேயின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்ம் புலிகள் பிரதி நிதிகளைச் சந்திப்பதற்காக இவ்வார இறுதியில் லண்டன் செல்லவுள்ளதாக மற்றொரு தகவல் தெரிவித்தது. (இ-3-8)

## களஞ்சிய பொறுப்பாளர் இன்று நீதிமன்றில்

யாழ்ப்பாணம்,நவ.23

யாழ்ப்பாணம் - குருநகர் அரச களஞ்சியப் பொறுப்பாளர் ஆர்.கதிர்காமநாதனை இன்று நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

இவரைப் பிணையில் விடுதலை செய்யுமாறு வவுனியாவில் இயங்கும் வடமாகாண மேல் நீதிமன்றத்தின் உத்தரவு நேற்றுப் பிற்பகல் யாழ்.நீதிமன்றத்திற்குக் கிடைத்ததை அடுத்தே இவரை இன்று ஆஜர் செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (இ-3-5)

## புலிகள் தரப்பில் உயிரிழந்த ஐவர் விவரம்

வவுனியா,நவ.23

வெவ்வேறு இடங்களில் படையினருடன் இடம்பெற்ற மோதல் சம்பவங்களின் போது தமது தரப்பில் உயிரிழந்த ஐவரின் பெயர் விவரங்களை விடுதலைப்புலிகள் தமது 'புலிகளின் குரல்' வானொலி மூலம் அறிவித்துள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

கடந்த 20 ஆம் திகதி மன்னார் கடற்பரப்பில் கடற்படையினருடன் இடம்பெற்ற மோதலில் 2 ஆம் லெப்ரினன்ட் ஜெகன் (வரப்பிரகாசன் அன்ரு பிரபாகரன்) என்பவரும் -

(10ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கட்சிகளுடன் பீற்றர் ஹெய்ன் சந்திப்பு

கொழும்பு,நவ.23

சமாதான முயற்சிகளை எட்டுவதற்கு மோதலில் ஈடுபட்டுள்ள விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும் என்று இரு தமிழ்க் கட்சிகள் இலங்கை வந்துள்ள பிரிட்டிஷ் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் பீற்றர் ஹெய்னிடம் கோரியுள்ளன.

தமிழ்க்கட்சிப் பிரதிநிதிகளுடன் நேற்று அவர் நடத்திய சந்திப்பில் கலந்து கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு வலியுறுத்தினர்.

சகல தரப்பினருடனும் பேச்சு நடத்துவதை விடுத்து புலிகளுடன் மட்டுமே பேசவேண்டும் என்று அவர்கள் கோரினர்.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட ஈ.பி.டி.பி பிரதிநிதிகள், சமாதான முயற்சிகள் குறித்த விடயத்தில் புலிகளை நம்ப முடியாது. ஜனாதிபதி முன்வைத்துள்ள தீர்வுத் திட்டத்தை சில திருத்தங்களுடன் அமுல் செய்ய வேண்டும் என்று கோரினர். (இ-3-8)

## இன்று ஒரு விமானச் சேவை மட்டுமே!

யாழ்ப்பாணம்,நவ.23

பலாலி - இரத்மலானை விமானச் சேவையில் இன்று ஒரு சேவையே இடம்பெறும் என்று யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது. நேற்று இரு சேவைகள் இடம்பெற்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## பதிவு செய்யும் பணி மீண்டும் நாளை

யாழ்ப்பாணம்,நவ.23

பலாலி - இரத்மலானை விமானச் சேவைக்கான பதிவுகள் நாளை வெள்ளிக்கிழமை முதல் இடம் பெறும் என்று வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபை அதிகாரி எஸ்.குகராஜன் தெரிவித்தார்.

வெளிநாட்டில் இருந்து வந்தவர்கள் மற்றும் பயண அனுமதிப்பத்திரம் பெற்றவர்கள், அரச அதிகாரிகள் தமது பதிவுகளை மேற்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி

அன்பர்களும், நிறுவனங்களும், பாடசாலைகளும், ஆலயங்களும், சமூக நிலையங்களுமாக நேற்று(22-11-2000) 'நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி'க்கு தமது அன்பளிப்புக்களை வழங்கியிருந்தனர். அவர்களின் விவரங்கள் நாளைய உதயனில் வெளிவரும்.

**நேற்றுவரை இந்நிதிக்குக் கிடைத்த மொத்தத் தொகை ரூ. 915,444**

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# 27ஆம் நாள் நினைவு ஆராதனை



அன்னை மடியில் 1958 - 06 - 30

ஆண்டவன் அடியில் 2000 - 10 - 28

கர்த்தருக்குள் நித்திரையடைந்த

## திருமதி ஜெயமலர் எலிசபேத்

அவர்களின் ஆராதனை இன்று (23.11.2000) வியாழக்கிழமை பலாலி றோட், கோண்டாவில் நல்ல சமாரியன் ஆலயத்தில் நடைபெறும். இவ்ஆராதனையில் சபை ஊழியர்கள், விசுவாசிகள், உற்றார், உறவினர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

பிறக்க ஒரு காலம் உண்டு; இறக்க ஒரு காலம் உண்டு;
நட ஒரு காலம் உண்டு; நட்டதைப் பிடுங்க ஒரு காலமுண்டு.
*(பிரசங்கி 3-2)*

ஒரு காரியத்தின் துவக்கத்தைப் பார்க்கிலும் அதின் முடிவு நல்லது.
பெருமையுள்ளவனைப் பார்க்கிலும் பொறுமையுள்ளவன் உத்தமன்
*(பிரசங்கி 7-8)*

நீங்கள் பாவம் செய்யாமல் நீதிக்கேற்க விழித்துக்கொண்டு தெளிந்தவர்களாயிருங்கள். சிலர் தேவனைப்பற்றி அறிவில்லாதிருக்கிறார்களே உங்களுக்கு வெட்கமுண்டாக இதைச் சொல்லுகிறேன்.
ஆகிலும் மரித்தோர் எப்படி எழுந்திருப்பார்கள். எப்படிப்பட்ட சரீரத்தோடே வருவார்களென்று சொல்வானாகில் புத்தியீனனே நீ. விதைக்கிற விதை செத்தாலொழிய உயிர்க்க மாட்டாதே.
நீ விதைக்கிறபோது இனி உண்டாகும் மேனியை விதையாமல் கோதுமை அல்லது மற்றொரு தானியத்தினுடைய வெறும் விதையே விதைக்கிறாய். அதற்குத் தேவன் தமது சித்தத்தின் படியே மேனியைக் கொடுக்கிறார். விதை வகைகள் ஒவ்வொன்றுக்கும் அதற்கேற்ற மேனியையே கொடுக்கிறார்.
எல்லா மாமிசமும் ஒரேவிதமான மாமிசமல்ல மனுஷருடைய மாம்சம் வேறே. மிருகங்களினுடைய மாம்சம் வேறே. பறவைகளுடைய மாம்சம் வேறே.
வானத்துக்குரிய மேனிகளுமுண்டு. பூமிக்குரிய மேனிகளுமுண்டு. வானத்துக்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே. பூமிக்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே.
சூரியனுடைய மகிமை வேறே. சந்திரனுடைய மகிமையும் வேறே. நட்சத்திரங்களுடைய மகிமையும் வேறே மகிமையிலே நட்சத்திரங்களுக்கு நட்சத்திரம் விஷேசித்திருக்கிறது மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும் தாய் அழிவில்லாததாய் எழுந்திருக்கும் கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும் மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும் பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும். பலமுள்ளதாய் எழுந்திருக்கும்.
*(கொரிந்தியர் 15 - 34 - 43 வரையுள்ள வாக்கியங்கள்)*

*பலாலி றோட்,*
*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.*

***எஸ்.தருமபாலன் (சகரியா)***

(C/80796)

# சனியன்று 92.7 மி.மீ. மழை

யாழ்ப்பாணம்,நவ.23

யாழ்.குடாநாட்டில் கடந்த சனிக்கிழமை அதிகூடுதலாக 92.7 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளதாக திருநெல்வேலியிலுள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் பதிவுகள் தெரிவிக்கின்றன.

அதிகுறைந்த அளவு மழையாக நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை 10.5 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை 20.3 மில்லி மீற்றரும், ஞாயிறன்று 32.3. மில்லி மீற்றரும், திங்களன்று 81.2மில்லிமீற்றரும் மழை பெய்துள்ளது.

(இ-10-5)


**திரு. A.மகாதேவா**
அவர்களின்
**இரசாயனவியல்**
வகுப்புக்கள்
எதிர்வரும் 25-11-2K
சனிக்கிழமை முதல்
வழமைபோல்
நடைபெறும். (80808)

**கணக்கீடு**
A/L 2002
வங்கிக் கணக்கிணக்கக் கூற்று
ஆரம்பம் :- 23.11.2000
3.30 p.m
ஆசிரியர்- திரு.S.தவா
[B.Com. (Hons) Acc.Spl]
**NEW SCIENCE COLLEGE**
JAFFNA. (80804)

**மலிவு விற்பனை**
குறோட்டன்,
செவ்வரத்தை, பாம்,
எக்ஸ்சோறா, லூறக்கேரியா,
சைபிரஸ், அஸ்பரஸ்
மற்றும் சாடி வகைகள்
விற்பனைக்குண்டு.
இடம்:
**GREEN SERVICES**
அரசடி அம்மன் றோட்,
திருநெல்வேலி.
(றோயல் டிஸ்பென்சறி இல்லம்)
(80808)

**நாகம்ஸ்** சுன்னாகம்
அர்ஜுன்,ரோஜா,
ரம்பா,ஆனந்தராஜ்
நடித்த
**அடிமைச்சங்கிலி**
(றீகல்) காட்சிகள் - 11.00, 2.30 (பி.நே.
(80794)

**ராஜா** யாழ்ப்பாணம்
'விஜய், சிம்ரன்,
மணிவண்ணன்
மற்றும் பலரின் நடிப்பில்
இனிய பாடல்கள் கொண்ட
**துள்ளாத மனமும் துள்ளும்**
காட்சிகள்:10.30, 2.00 (பி.நே.)
(C/13648)


# முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



இம்மைக்குள் 27 - 03 - 1952

மறுமைக்குள் 21 - 11 - 1999

## செல்வி ராஜினி ரட்ணசிங்கம்

(முன்னாள் ஆசிரியை, யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

வேத வசனத்தின் பிரகாரம்
வாழ்ந்து காட்டிய எம் சகோதரியே!
நீங்கள் வாழ்ந்த வாழ்வு,
பலரின் இரட்சிப்புக்கும் காரணமாயிற்றே!
ராஜி ! என்று எல்லோரும் அழைக்கும் ஒலி
இன்றும் எம் செவிகளில் ஒலித்துக்கொண்டேயிருக்கிறது.
பாடசாலை மாதாவிற்கு நீங்கள் செய்த சேவை,
தன்னலமற்றது! மறக்கமுடியாதது!
இன்றும் உங்கள் இல்லம்,
சிறுவர் பராமரிப்பு நிலையமாக மிளிர்ந்து,
தங்கள் தூய பணியைத் தொடர்கிறது!
ஒரு நல்ல போராட்டத்தைப் போராடி,
ஓட்டத்தை முடித்து,
நித்தியத்தில் இளைப்பாறும் தங்களை
இந்நாளில் நினைவு கூர்வதில் பெருமையடைகின்றோம்.

**யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆசிரியர்,**
**ஊழியர் நலன்புரிச்சங்கம்.**

(C-13942)

# இதய அஞ்சலி

எமது கல்லூரி அதிபர்
**திரு. ந.பரமசிவம்**
அவர்களின் பாசமிகு தந்தையார்
## வேலாயுதர் நல்லதம்பி

அவர்கள் 19.11.2000 அன்று சிவபதம் அடைந்ததையிட்டு துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உயர்தர மாணவர் மன்றம்,
**யாழ்.யாழ்ரன் கல்லூரி,**
காரைநகர்.

(80797)

# கண்ணீர் அஞ்சலி

பருத்தித்துறை கலைவாணி நகைமாட உரிமையாளர்
**திரு.திருமதி ஆ.பாலச்சந்திரன்**
*தம்பதியினரின் அருமை மருமகனும்,* **யசோவின்** *அன்புக் கணவருமாகிய*
## அருள்பிரதாசன் முரளிதரன்

அகால மரணமடைந்ததையிட்டு மிக்க வேதனை அடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பருத்தித்துறை
ப.தெ.வ.அ.கூ.ச.பணியாளர்,
சிக்கன கடனுதவி கூ.சங்கம்.

(C/13949)

# மரண அறிவித்தல்கள்

## பெரியதம்பி கந்தையா

இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பெரியதம்பி கந்தையா நேற்று (22.11.2000)புதன்கிழமை காலமானார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும், ரத்தினபூபாலன் (ஆசிரியர், மன்னார்), பாலசுப்பிரமணியம் (டாக்டர்), அருணகிரி (லண்டன்), அருட்சோதி (கனடா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், லில்லிமலர், கோப்பரந்தேவி, இன்பம் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2000) வியாழக்கிழமை 11 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இணுவில் மேற்கு,*
*இணுவில்.*

தகவல்:
Dr. பாலசுப்பிரமணியம்.
(மகன்)

(80798)

## சரவணமுத்து யோகசுந்தரம் (சோமு)

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் பத்தமேனியை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து யோகசுந்தரம் (சோமு) நேற்று 22.11.2000 காலமானார்.

இவர் காலஞ்சென்ற அமுதத்தின் அன்புக் கணவரும் சிவஞானச்செல்வன் (மருத்துவபீடம்), திலகராணி ஆகியோரின் தந்தையும் சுசீலாதேவி (நீதிமன்றம், கிளிநொச்சி), தியாகராசா (கிளை முகாமையாளர், அச்சுவேலி) ஆகியோரின் மாமனாரும், கஜந்தினி, அனித்தா, நர்மதா, நிருஷா, சஜேந்தி, அனோஜா, அனுராகன் ஆகியோரின் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2000) வியாழக்கிழமை 8.00 மணியளவில் ஆவரங்காலில் நடைபெறும்.

*வன்னியசிங்கம் வீதி,*
*ஆவரங்கால்.*

தகவல்:
யோ.சிவஞானச்செல்வன்
(மகன்)

(80795)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



சுன்னாகம் நாகம்ஸ் சினிமா,
நாகம்ஸ் பாட்டா சகநிறு வனங்களின்
உரிமையாளரும்
சமூக சேவையாளருமாகிய


## திரு. நன்னித்தம்பி இராஜரட்ணம்

அவர்கள் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டதையிட்டு
அவரின் சமூகப்பணி மேலும் சிறப்பாக நடைபெற
இறையருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

குளுக்கண்டிலேன்,
கட்டப்பிராய்.

**திரு.திருமதி குருநாதன்,**
**பிள்ளைகள்**

(C13947)



# கவிமணிக்கு எமது நல்வாழ்த்துக்கள்!

எமது அறநெறிப் பாடசாலை ஆசிரியரும் யாழ். பாலர் கல்விக்கழக உப தலைவரும் அகில இலங்கை சைவப் புலவர் சங்கப் பொருளாளரும் அகில இலங்கைத் திருமுறை மன்ற உறுப்பினரும் யாழ். வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலய 'சரணம் காமாக்ஷி' ஒலி நாடா பாடலாசிரியரும் சிறந்த வில்லிசைக் கலைஞருமாகிய யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்த

**சைவப் புலவர் உயர்திரு. இராசையா ஸ்ரீதரன்**

யாழ். இந்துசமயப் பேரவையினால் **கவிமணி** என்னும் சிறப்புப்பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையைப் பாராட்டி நல்வாழ்த்துக் கூறுகின்றோம். அவரது பணி செவ்வனே தொடர விநாயகர், அம்பாள், சரஸ்வதிதேவியை வேண்டுகின்றோம்.

தா.சு.லோகநாதன் J.P.,
கேசாவில் முத்து விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்கள்.

(C/13948)

# சர்வதர்மமும் நிறைந்த பரம்பொருளின் பூரண அவதாரமே ஸ்ரீ சத்ய சாயிபாபா

இன்று பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் அவதாரநாள்.

உலகை உய்விக்க வந்துள்ள பரம்பொருளின் பூரண அவதாரமான பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா இப் புவியில் அவதாரம் செய்த புனித நாள் இது.

அள்ள அள்ளக் குறையாத ஆனந்த நாயகன் - உலக மக்களிடையே அமைதியையும் அன்பையும் ஆனந்தத்தையும் அறநெறியையும் பரப்பும் புனித பணிக்கென "சத்ய சாயி" என்னும் உருவில் - சர்வதர்மமும் சாந்தியும் அன்பும் நிறைந்த பரம்பொருளின் பூரண அவதாரமாகத் தோன்றியுள்ளார்.

உடல் நோயைக குணப்படுத்திக் கொள்ளவும் உலகவாழ்வில் நேரும் இடுக்கண்களைக் களைந்து கொள்ளவும் ஆன்மீக விளக்கங்களைப் பெறவும் பாபாவை நாடிவந்த மக்கள் *தெய்வீக சித்தாந்தம் மனித உருத் தாங்கி வந்துள்ளது* என்றும், அது அன்புடனும் அமைதியுடனும் இனிமையுடனும் அனைவரையும் அழைத்து மகிழ்ச்சி, அமைதி, பாதுகாப்பு முதலியவைகளை வழங்குகின்றது என்றும் உலகுக்கு பறைசாற்றினார்கள்.

புவியின் மத்தியிலுள்ள புட்டபர்த்தியில் ஆத்ம தத்துவமே, மனித உருவில் தோன்றி உள்ளது. அதுவே "சாயி" என்னும் நாமம் தரித்து வந்திருக்கும் கிருஷ்ண தத்துவம் ஆகும். இந்த அவதாரம் மக்களை ஈர்த்து இழுப்பதுடன் அறியாமையைப் போக்கி நம்பிக்கையையும் தைரியத்தையும் புத்துணர்ச்சியையும் அளித்து வருகிறது.

அருட்பார்வையோ, புன்சிரிப்போ, ஒரு வார்த்தையோ, தெய்வீக கரத்தினால் ஒரு சிறு அன்புத் தட்டலோ, பாத நமஸ்காரம் செய்யும் வாய்ப்போ பெற்றுவிட்டால் அடையும் பேரானந்த அனுபவத்தை அளவிடவே முடியாது.

அவர்கள் நன்றியுடன் நினைவு கூர்வது அன்றாடம் காணும் நிகழ்ச்சியே. ஆகவே உலகெங்குமிருந்து பண்டிதர்களும் பாமரர்களும் சிறியோரும் பெரியோரும் பிரசாந்தி நிலையத்தை நாடி வந்தவண்ணமே இருக்கிறார்கள்.

தாத்தாத்ரேயரும் தட்சணாமூர்த்தியும் தன்வந்திரியும் மூவரும் ஒருவராகவும் தாயன்பும் தந்தையின உறுதியும் குருவின் ஞானமும் தெய்வத்தின் அருளுமாகிய நான்கும் ஓர் உருவாகக் கொண்டு "பிரேமசக்தியாக" பகவான் அவதரித்துள்ளார். நிலை குலைந்துள்ள உலகை மீண்டும் சீர்செய்யவே மனித இயல்பு ஆனந்தமே என்பதை உணர்த்தவே பகவான் அவதாரம் செய்துள்ளார்.

"சாயி" என்னும் நாமம் தரித்து



பாபாவின் அவதார நாள் இன்று

வந்திருக்கும் கிருஷ்ணதத்துவமே பாபா. அன்பு,. ஞானம், கருணை, சர்வசக்தி ஆகிய அனைத்தும் ஓர் உருவானவர் பாபா. அவருடைய ப்ரேமை இப்பிரபஞ்சம் முழுவதையும் அணைத்து ஆட்கொள்கிறது. மனிதரைப் போலவே நம்மிடையே உள்ள "அவரை" எம்மால் காண முடிகிறது. பாபா நமக்கருகில் அன்புடன் வருகை புரிகின்றார். அதனால் அவரை நாம் நெருக்கமாக உணரமுடிகிறது. ஆகவே நாம் எத்திக்கில் நோக்கினும் அவரைக் கண்குளிரக் காணமுடிகிறது. அவர்காலத்தில் வாழும் நாம் உண்மையில் பாக்கியசாலிகளே!

பகவானின் சக்தி எல்லையற்றது. அவர் கோடானு கோடி பக்தர்களின் குறைகளைத் தகர்த்து, அவர்களின் பிணிகளைப் போக்கி, அவர்கள் தேவைகளை நிறைவு செய்கிறார்.

பாபாசெய்யும் அற்புதங்களிலெல்லாம் தலையாய அற்புதம் அவர் தமது பக்தர்களின் வாழ்விலும் உள்ளங்களிலும் ஏற்படுத்தும் மாற்றங்கள். பகவானை நன்கு உணர்ந்த பக்தர்கள் தம்முள் ஏதோ மாறுதல்களை உணர்கிறார்கள்.

அவர்கள் முன்னரைக் காட்டிலும் ஆனந்தமாக இருப்பதையும் தைரியமாக இருப்பதையும் தம்மிடமிருந்த தீய இயல்புகள் மறைந்து நற்பண்புகள் மலர்வதையும் அறிகிறார்கள்.

நமது பிரார்த்தனையின் ஒவ்வொரு வார்த்தையையும் பாபா கேட்டுக் கொண்டுதான் இருக்கின்றார். ஒவ்வொரு துன்பப் பெருமூச்சையும் அவர் இதயம் பதிவுசெய்து கொண்டுதான் இருக்கிறது. பக்தர்களின் துன்பக் கண்ணீரை அவர் அசட்டை செய்வதில்லை

அவர் நமக்கு மிக நெருங்கிய உறவினர். உற்ற நண்பர். நம்பிக்கையூட்டும் வழிகாட்டி. அன்புத் தாய்: *("சாயி" என்ற சொல்லுக்கு தாய் என்பது பொருள்.)* உயிர்மூச்சே அவர் நாமம்.

*"ஜெய ஜெய சாயி குருசாயி"*

## எல்லோரிடமும் அன்பு செலுத்துவதையே பகவான் பக்தர்களிடம் எதிர்பார்க்கிறார்

பாபா நம்மிடம் எதிர்பார்ப்பதெல்லாம் தளராத தெய்வபக்தியும் எல்லா உயிரினங்களிடமும் மாறாத அன்பு செலுத்துவதுமே!

பகவானின் 75ஆவது பிறந்த நாள் விழாவின் முக்கிய குறிக்கோளாக அமைவது -

*"அன்பு காட்டு, சேவைசெய்"*" என்பதே (**Love All Serve All**).

சேவையின் வயிற்றில்தான் அன்பு பிறக்கின்றது. சேவையின் மூலமாகவே அன்பு வளர்கின்றது. கடவுளே அன்பு. அன்பே கடவுள்.

அன்பைத் தவிர வேறெதுவும் வேண்டாத அன்புத் தெய்வமே!

உன்னால் நாங்கள் வாழ்கிறோம்: உனக்குள் வாழ விழைகிறோம். இந்தச் சுவையை விட வேறெந்தச் சுவையும் எமக்குப் பெரிதாய்ப்படவில்லை.

பர்த்தீசா! பரமேசா! நீமட்டும் தான் எங்கள் ஒரே அடைக்கலம். அபயப்பிரதாபனே! தங்கள் பாதாரவிந்தங்களில் சரணம் அடைகின்றோம்.

ஆதியும் நீயே! அந்தமும் நீயே!
அருமறை முதல்வனும்
ஆதிதேவனும் நீயே!

**ஆர்.சுதாகரன்**

அன்னையும் நீயே! அப்பனும் நீயே!
ஆனந்தமும் நீயே! அபயப்பிரதாபனும் நீயே!

"கடமையைச் செய்; பலனை எதிர்பார்க்காதே" என்று ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் வரலாற்றுச் சிறப்புமிக்க பகவத்கீதையை அர்ஜுனனுக்கு உபதேசித்த அதே பரமாத்மாவே பாபா.

அதையே பகவான் கீதை வாகினியாக, பொழிந்து கொண்டிருக்கிறார். அதனைச் செவி மடுப்போம். அதன் வழி நடப்போம்.

சனாதன தர்மத்தை ஸ்தாபனஞ் செய்ய வந்த சனாதன சாரதி பகவான் பாபா! இவ்வுலகில் சனாதன தர்மம் மீண்டும் ஸ்தாபனமாக வேண்டுமென்பதே அவர் விருப்பம்.

உங்களுக்காக உங்கள் இதயத்தில் நான் குடி கொண்டுள்ளதை எந்த நாளில் உணர்கிறீர்களோ அந்த நாளையே நீங்கள் எனது பிறந்தநாளாகக் கொண்டாட வேண்டுமென்று நான் விரும்புகின்றேன் என்கிறார் பாபா.

நான் என்றைக்கு உங்கள் உள்ளங்களில் அன்பின் வடிவில் பிறக்கிறேனோ அந்த நாளைத்தான் நீங்கள் என் பிறந்தநாளாகக் கொண்டாட வேண்டுமென்கிறார் பாபா. உங்கள் உள்ளங்களில் மலரும் தெய்வத்துவமே என் பிறந்தநாள்.

**My Birthday is the date When Divinity Blossom in your Heart.***(Baba)*

ஓம் ஸ்ரீ சாயிராம்!

★

## யாழ்ப்பாணவாசி கனடாவில் கத்தியால் குத்திக் கொலை!

நெல்லியடி,நவ.23

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர், கனடாவில் விடுதி ஒன்றில் வைத்துக் கத்தியால் குத்திக் கொலை செயயப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக, சந்தேகத்தின் பேரில் இறந்தவரின் நண்பரான கோண்டாவிலைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் அந்நாட்டுப் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டிருப்பதாக இங்கு தகவல் கிடைத்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கனடா ரொரன்ரோ நகரில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் யாழ்ப்பாணம் பலாலி வீதியைச் சேர்ந்த க.சுதாகரன் (வயது40) என்பவரே பலியானவராவார்.

ஒரு பிள்ளையின் தந்தையான இவர், தனது மனைவி பிள்ளையுடன் வீட்டில் இருந்த வேளை, இவருடன் நெருக்கமாகப் பழகிவந்த கோண்டாவிலைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் அவரை அழைத்துச் சென்றார் என்றும் -

பின்னர் விடுதி ஒன்றில் கத்தியால் குத்தப்பட்ட நிலையில் அவரது சடலம் காணப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

இச்சம்பவம் தொடர்பாக பொலீஸாரினால் கைது செய்யப்பட்டிருக்கும இளைஞன் தற்பொழுது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் தெரியவருகின்றது.

இறந்த குடும்பஸ்தர் மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்டவர். யாழ்ப்பாணத்தில் திருமணம் செய்தபின் கடந்த 98ஆம் ஆண்டு நடுப்பகுதியில் கனடாவில் வேலை வாய்ப்பு பெற்றுச் சென்றிருந்தார். (ஐ-109)

## சட்ட விரோதமாக வெட்டப்பட்ட இறைச்சி அழிப்பு

சண்டிலிப்பாய்,நவ.23

பிரதேச சபையின் முன் அனுமதி பெறாது சட்ட விரோதமான முறையில் வெட்டப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த 18 கிலோ மாட்டிறைச்சி பண்டத்தரிப்பு பொது சுகாதார பரிசோதகரினால் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டது. (ம-135)



அளவெட்டி ஆஸ்பத்திரியில் அமைக்கப்பட்ட புதிய கட்டடங்கள் அண்மையில் திறந்து வைக்கப்பட்டன. பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் உ.சிவபாதசுந்தரம் ஆஸ்பத்திரிப் பெயர்ப் பலகையை திரை நீக்கம் செய்து வைப்பதை முதலாவது படத்திலும் -
வலி.வடக்கு பிரதேச செயலர் திருமதி ப.திலகநாயகம் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவுக் கட்டடத்தைத் திறந்து வைப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். (ஐ)

## இடம்பெயர்ந்தோர் கொடுப்பனவு

நவாலி,நவ.23

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் ஜே.149, ஜே.140 கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் வசிக்கும் இடமபெயர்ந்தவர்களுக்குரிய இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவு இன்று வழங்கப்படும்.

நாளை இதே பிரதேச செயலர் பிரிவின் கீழ் ஜே.148 பிரிவுக்குட்பட்ட இடம்பெயர்ந்தோருக்கும், எதிர்வரும் 25ஆம்,26ஆம் திகதிகளில முறையே ஜே.138, ஜே.136 பிரிவுகளுக்குட்பட்ட இடம் பெயர்ந்தோருக்கும் மேற்படி கொடுப்பனவுகள் வழங்கப்படும்.(இ-8-100)

## மகரஜோதிப் பெருவிழா

கொழும்பு,நவ.23

சபரிமலை ஸ்ரீ ஐயப்ப சுவாமியின மகர ஜோதிப் பெருவிழா நாளை வெள்ளிக்கிழமை முதல எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமைவரை லண்டன், சுவிட்சர்லாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் நடைபெறவுள்ளது.

இந்த விழாக்களுக்குத் தலைமை வகிப்பதற்காக சர்வதேச இந்துமத குருபீடத் தலைவரும், அகில இலங்கை சபரிமலை ஸ்ரீசாஸ்தா பீடாதிபதியுமான கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்ப சிவ சிவாச்சாரியார் நேற்று மாலை 5.30 மணிக்கு மேற்படி நாடுகளுக்கான பயணத்தை மேற்கொண்டார். (இ-8)

## யாழ்ற்ரனில் ஆய்வுகூடம்

காரைநகர்,நவ23

நவீன வசதிகளுடன் கூடிய விஞ்ஞான ஆய்வுகூடம் ஒன்று காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் அமைககப பட உளளது.

இந்த ஆய்வுகூடம் அமைப்பதற்கு கல்வி அமைச்சினால் 8 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் ந.பரமசிவம் தெரிவித்தார். (இ-73)

## தொடர்பில்லை எனத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.23

சர்வதேச ஊனமுற்றோர் தினமான டிசெம்பர் 3ஆம் திகதியை முன்னிட்டு பிரதான வீதி தொல்புரம் என்று முகவரியிடப்பட்டு விற்பனையாகி வரும் 100 ரூபா பெறுமதியான ரிக்கெற்றுகளுக்கும் தமக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத் தலைவர் ந. சிவராசா அறிவித்துள்ளார். (ம)



வடபிராந்திய சத்தியசாயி நிறுவன இணைப்புக் குழுவின் இளைஞர் சபையினர் யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் தொடர்ந்து இரத்த தானம் வழங்கி வருகின்றனர். அண்மையில் இளைஞர் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் இரத்த தானம் செய்தபோது எடுக்கப்பட்ட படம். அருகில் இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி டாக்டர் சிவசங்கரும் காணப்படுகின்றார்.

*(அரியாலை செய்தியாளர்)* (ஐ-17)

## தமிழர் ஆசிரியர் சங்கம் சுகவீன லீவுப் போராட்டம்!

### 9 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து

திருகோணமலை,நவ.23

ஒன்பது அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் எதிர்வரும் 30ஆம் திகதி வடக்கு - கிழக்கில் ஒருநாள் சுகவீன லீவுப் போராட்டத்தை நடத்தவுள்ளது.

மேற்படி சங்கத்தினால் முன் வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் வருமாறு:-

★ விடுதலைப்புலிகளுடன் யுத்த நிறுத்தம் செய்து அரசியல் தீர்வுக்கான பேச்சுக்களில் அரசாங்கம் ஈடுபட வேண்டும்.

★ இலவச பாடநூல் விநியோகம், அச்சிடும் முறை.

★ மாகாணக்கல்வி அமைச்சில் குவிந்துள்ள அதிகாரங்களைப் பரவலாக்கல்.

★ ஆசிரியர் செயலாற்றுகை, தரக்கணிப்புச் செயன் முறையை ரத்துச் செய்தல்.

★ தமிழ்ப்பாடசாலைகளுக்கு தமிழ் அதிபர்களை நியமனஞ் செய்தல்.

★ ஆசிரியர், அதிபர், கல்விநிர்வாக அதிகாரிகள் கல்வியாளர் சேவையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புதல்.

★ இடர்காலக் கொடுப்பனவு, சம்பள நிலுவை, தேக்கநிதிப்படி உயர்ச்சி, கடன் வழங்கல்.

★ அதிபர் பதவி உயர்வு.

★ மனித நாகரிகமற்ற படுகொலைகள்.

இந்தத் தகவல்களை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்துள்ளார். (இ-7)

# கண்ணீர் அஞ்சலி

எமது நிர்வாக இயக்குநர்

**திரு. துரைரட்ணம் அவர்களின்**

அன்புத் தாயாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், இவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகத்தினர்,
IBMS.

701, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (சி/13951)

# கண்ணீர்க் காணிக்கை

ஊர்காவற்றுறை பிரதேச சபை ஊழியர்

**மா. செல்வராசா**

அவர்களின் அன்புத் தந்தையார்

**சி. மாணிக்கம்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

(சி/13952)

# 10ஆம் ஆண்டு நினைவு மீட்டல்

## அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம்

(முன்னாள் சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரும், சமூக அபிவிருத்தி மன்ற ஸ்தாபகரும் - இணைப்பதிகாரியும்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06–10–1924 | 23–11–1990 |

சமூக அபிவிருத்திக்காக அயராது உழைத்து எம்மை வழி நடத்திய அன்னாரை நினைவு கூருகின்றோம்.

**சமூக அபிவிருத்தி மன்றம்.**

குறிப்பு: அனைத்து கழகஉறுப்பினர்களும் சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறும் நினைவு விழாவில் தவறாது சமுகமளிக்கவும்.

நிர்வாகச் செயலாளர்,
யாழ்ப்பாணம். ச. அ. மன்றம்.

(80799)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா செல்வரத்தினம்

யாழ்ப்பாணம், 38, கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பு காரைதிவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செல்வரத்தினம் 21-11-2000 செவ்வாய்க்கிழமை காரைதீவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா – சின்னம்மா தம்பதிகளின் அருமைப் புதல்வனும், அன்னம்மாவின் அன்புக்கணவரும், பகிரதன், யசோதா, கோகுலா ஆகியோரின் அன்புத் தந்தையும், கருணானந்தம், தியாகராசா, திருமதி எஸ். படியலிங்கம், பரமேஸ்வரி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-11-2000) வியாழக்கிழமை பி. ப. 2 மணிக்கு காரைதீவிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளன.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சகோதரி.

கச்சேரி,
யாழ்ப்பாணம். (80782)

## வல்லிபுரம் வடிவேலு

அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் வடிவேலு 21 – 11 – 2000 அன்று இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் முத்துப்பிள்ளையின் அருமை மகனும், காலஞ்சென்ற இளையாச்சிப்பிள்ளையின் பெறாமகனும், லீலாவதியின் பாசமிகு கணவரும், கஜேந்திரன், புலோக இந்திரன் (பூலோகன்), விஜேந்திரன், ஜெகேந்திரன் (கனடா), சுவேந்திரன், சுதனி (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஈஸ்வரி, காஞ்சனா, வனஜா ஆகியோரின் மாமனாரும், சபேஷன், கௌசி, நிட்சியா, பிரியன், கௌதம் (கனடா) ஆகியோரின் பரசமிகு பேரனும், தனபாலசிங்கம் (இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்) அவர்களின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை மறுதினம் (25 - 11 - 2000) திருச்சியில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா. தனபாலசிங்கம்

81, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (80803)

# மாணவர்களுக்கு செயலமர்வு

தென்மராட்சி, நவ. 23

தென்மராட்சி கல்வி வலயமும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் இணைந்து நடத்தும் ஜி. சி. ஈ. உயர்தர மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் செயலமர்வுகள் நாளை வெள்ளிக்கிழமை நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த 50 மாணவர்கள் இந்தச் செயலமர்வுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (ம — 117)

# சத்யசாயி பிறந்ததின நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ. 23

ஊரெழு சத்ய சாயி மண்டலியில் பாபாவின் 75 ஆவது பிறந்த நாள் நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணி முதல் நிலைய மண்டபத்தில் நடைபெறும். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற உள்ளன. (ம)

# சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, நவ. 23

சித்தன்கேணி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் தேவஸ்தானத்தில் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணி முதல் சிவன், சிவகாமி, நந்திகேஸ்வர் முதலியோருக்கு விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை, வழிபாடுகளுடன் நடைபெறும். இதனைத் தொடர்ந்து நாட்டில் ஒற்றுமை, அமைதி, சமாதானம், சுபிட்சம் நிலவ இறையாசி வேண்டி பஜனை, கூட்டுப் பிரார்த்தனை வழிபாடுகளும் இடம்பெறும்.

(ம-30)

★ ★ ★

கொழும்புத்துறை, நவ. 23

வட்டுக்கோட்டை அருள்மிகு ஸ்ரீசிவகாமி அம்பாள் சமேத வீரபத்திரர்சிவன் திருக்கோயிலில் இன்று வியாழக்கிழமை மாலை 4-30 மணியளவில் பிரதோஷ விரதம் திருவிழா விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை, வழிபாடுகளுடன் இடம்பெறும்.

(ம-30)

★ ★ ★

நல்லூர் அருள்மிகு ஸ்ரீசிவன் திருக்கோயிலில் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில் பிரதோஷ விரதம் திருவிழா விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை, வழிபாடுகளுடன் நடைபெறும். (ம-30)

# உடுப்பிட்டியில் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம். நவ. 23

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.3 மணிக்கு அதிபர் திருமதி இ. குட்டித்தம்பி தலைமையில் கல்லூரியில் நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விவசாயபீட விலங்கியல் விஞ்ஞானத்துறைத் தலைவரான பேராசிரியர் அ. நவரட்ணராஜா கலந்து கொள்வார்.

அன்றைய தினம் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தால் கட்டப்பட்ட மலசலகூடத் தொகுதியும், பழைய மாணவிகள் சங்கத்தால் அமைக்கப்பட்ட குழாய் நீர் விநியோகத் திட்டமும், கணனி அறையும் கல்லூரி பெயர் வளைவும் திறந்து வைக்கப்பட உள்ளன.

(ம)

# துப்பாக்கிகள், கத்திகள் சகிதம் வீட்டில் துணிகரக் கொள்ளை!

## கோப்பாயில் சம்பவம்

கோப்பாய்ச் சந்திக்கு அண்மையில் உள்ள வீடு ஒன்றில் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளும், பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளன.

கடந்த திங்களன்று இரவு 8 30மணி அளவில் எஸ்.மலர் என்பவரது வீட்டிற்கு துப்பாக்கிகள், கத்திகள் சகிதம் சென்ற இனந்தெரியாத எட்டுப் பேர் இக்கொள்ளையை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக பொலீஸாரிடம் முறைப்பாடு செய்யக்கூடாது என கொள்ளையர்கள் கண்டிப்பாகஎச்சரித்துவிட்டுச் சென்றதாகவும் கூறப்பட்டது.

இக்கொள்ளை தொடர்பாகக்கோப்பாய்ப்பொலீஸார் கடந்த செவ்வாயன்று சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணையை மேற் கொண்டனர். சம்பவம் இடம்பெற்ற இடத்திலிருந்து 100 மீற்றர் தொலைவில் இராணுவக் காவலரண் ஒன்றும் அமைந்துள்ளது. (ம-72)

# மரண அறிவித்தல்கள்

## சிவசம்பு மாணிக்கம்

சித்தன்கேணியைச் சேர்ந்த சிவசம்பு மாணிக்கம் (பிரபல வியாபாரி) 22-11-2000 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பத்தினிப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கந்தையா (மலேசியா) அவர்களின் அன்புச் சகோதரரும், திருமதி கு. சின்னம்மா, திருமதி மு. மீனாட்சிப்பிள்ளை, காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் திருமதி தி. தெய்வானைப்பிள்ளை, காலஞ்சென்ற நவரட்ணசிங்கம் மற்றும் துரைராசா, செல்வராசா (பிரதேச சபை, ஊர்காவற்றுறை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சி. குமாரசாமி மற்றும் எஸ். முத்துத்தம்பி, திருமதி க. சறோஜா, சி. திருச்செல்வம், திருமதி ந. ஜெகஜோதி, திருமதி து. இராஜேஸ்வரி, காலஞ்சென்ற திருமதி செ. மனோலயம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-11-2000) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்வராசா (மகன்)
துரைராசா (மகன்)

சிவன் கோயிலடி,
சித்தன்கேணி. (80805)

## திருமதி நாகரத்தினம் யோகம்மா

உடுப்பிட்டி இலக்கணவத்தையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி நாகரத்தினம் யோகம்மா நேற்று (22-11-2000) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசிரியர் நாகரத்தினத்தின் அன்பு மனைவியும் துரைரட்ணம், சண்முகரட்ணம், குணரட்ணம், அரியரட்ணம், இரஞ்சிதமலர், இரத்தினதேவி, இரத்தினசோதி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுப்பிரமணியம், சோமசுந்தரம், கமலாதேவி, சத்தியபூபதி, மேகலா, தவலீலா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (22-11-2000) புதன்கிழமை நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
N. துரைரட்ணம் [மகன்]
N. சண்முகரட்ணம் [மகன்]
P. சேரமசுந்தரம் [மருமகன்]

இலக்கணவத்தை,
உடுப்பிட்டி. (80811)

பன்னாலை

## அப்பர் சிவபாதரத்தினம் (நடுவில்)

(இளைப்பாறிய அரச மருந்துக் கலவையாளர்)

பன்னாலையைப் பிறப்பிடமாகவும், சுழிபுரம் மேற்கை வதிவிடமாகவும், ஸ்கந்தபுரம், கிளிநொச்சியைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட அப்பர் சிவபாதரத்தினம் அவர்கள் நேற்று முன்தினம் (21 – 11 – 2000) செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பர்-பார்வதிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகரத்தினம் மற்றும் செல்வரத்தினம் (இளைப்பாறிய கிளை முகாமையாளர், தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்), காலஞ்சென்ற இரத்தினம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் திருமதி சி. இராசலட்சுமி (கிளிநொச்சி) அவர்களின் அன்புக் கணவரும், பிரான்ஸை வதிவிடமாகக்கொண்டவர்களான சிதம்பரநாதன், சிவநாதன், சிவராசநாதன், திருமதி ப. சிவராஜினி (கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜான்சிராணி, மகாலட்சுமி, விஜயராணி, திரு. பவானந்தன் (கிராம அலுவலர், கிளிநொச்சி – ஸ்கந்தபுரம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சகிலன், ஷாளினி, தாரணி, ருக்ஷினி ஆகியோரின் அன்புப் பேரனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஸ்கந்தபுரத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
தி. புவனேசன்

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம். (80809)

சங்கானை மேற்கு-தெற்கு விவசாயிகள் சம்மேளனம்

## விசேட பொதுக்கூட்டம்

இடம்:- யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

காலம்:- இன்று (23–11–2000) வியாழக்கிழமை பி. ப. 2. 00 மணி

குறிப்பு:-

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் மூலம் வழங்கப்பட்ட கடன் விவசாயிகளுக்கும், பயனாளிகளுக்கும் வழங்குவதற்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளதால் அனைவரையும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

வே. சிவலிங்கம்,
செயலாளர்.

(80791)

## நூல் வெளியீட்டு நிகழ்வு

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வுகளில் 'ஞானச்சுடர்' மாத நூல் வெளியீட்டு நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 10 30 மணிக்கு பேரவையின் தலைவர் சி. நாகலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்விற்கான வெளியீட்டுரையை வைத்திய கலாநிதி சி. கதிரவேற்பிள்ளை நிகழ்த்துவார். நூலின் மதிப்புரையை தேவரையாளி பாடசாலை ஆசிரியர் க. நடேசன் (தெணியான்) நிகழ்த்துவார் (ம—30)

## இன்று நடப்பவை

சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை பரிசளிப்பு விழாவும் கலைவிழாவும் அதிபர் வி. ஏரம்பமூர்த்தி தலைமையில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1. 00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக உடுவில் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ தற்பரானந்தனும் சிறப்பு விருந்தினராக ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகனும், கௌரவ விருந்தினர்களாக இளைப்பாறிய அதிபர்களான க. தெட்சணாமூர்த்தி, திருமதி பா. சிவானந்தம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

★ ★ ★

யாழ். நாச்சிமார் கோயிலடி பிரசாந்தி நிலையத்தில் பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் பிறந்த நாளையொட்டிய விசேட பஜனை இன்று பிற்பகல் 3. 30 மணிக்கு நடைபெறும். ஓம் காரமும் பிரார்த்தனையும் நடைபெற்று பஜனை முடிந்ததும் 'பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் அற்புதங்கள்' என்ற தலைப்பில் சிந்தனை நிகழ்வும் இடம்பெறவுள்ளது

# அரசாங்க அறிவித்தல்

## அரசினர் பொது வைத்தியசாலை, யாழ்ப்பாணம் 2001 ஆம் ஆண்டுக்கான பொருள்கள். சேவைகள் வழங்குநர்களைப் பதிவு செய்தல்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குத் தேவையான பின்வரும் பொருள்களையும் சேவைகளையும் வழங்குவதற்குத் தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் நிறுவனங்கள் மற்றும் தனியாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழ்க் காணும் நிறுவனங்களும் மேற்படி வழங்குநர்களாகப் பதிவு செய்து கொள்ள விண்ணப்பிக்கலாம்.

01. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்
02. கூட்டுறவுத் தொழிலாளர் சங்கங்கள்
03. கிராம அபிவிருத்திச் சங்கங்கள்
04. பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள்
05. 'சமுர்த்தி' முகாமையாளர்கள்
06. உரிய அதிகாரிகளால் அங்கீகரிக்கப்பட்ட கமக்காரர் ஸ்தாபனங்கள்

### அ) பொருள்கள்

அ) 01. காகிதாதிகள், எழுது பொருள்கள்
அ) 02. ஈர்க்கில் தடி. தும்புத்தடி, பாய்
அ) 03. பாவனைப் பொருள்கள் (சவர்க்காரம், தீப்பெட்டி, விம், காப்பிக், சவர அலகு முதலியன)
அ) 04. துணி வகைகள் வைத்தியசாலைப் பாவனைக்குரியவை (சீருடைத்துணி, கோடிட்ட துணி, படுக்கை விரிப்பு, துவாய் முதலியன)
அ) 05. மரத்தளபாடங்கள்—வைத்தியசாலைப் பாவனைக்குரியவை (கட்டில்கள் மேசைகள், கதிரைகள், வாங்குகள் முதலியன)
அ) 06. உருக்குத் தளபாடங்கள் — வைத்தியசாலைப் பாவனைக்குரியவை (அலுமாரிகள், கட்டில்கள், சேலைன் நிலைகள் முதலியன)
அ) 07. கட்டடப் பொருள்கள் — (சிமெந்து, பெயின்ற், ஆணிகள், கல், மணல் முதலியன)
அ) 08. மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் — (டயர், ரியூப், பற்றறிகள் முதலியன)
அ) 09. அரிந்த பனை மரங்கள், சலாகைகள், அரிந்த ஏனைய மரங்கள் (நிலைகள், யன்னல், கதவு உள்சிற் பொருத்துவதற்குரிய மரங்கள் முதலியன)
அ) 10. நீர் வழங்கு பொருள்கள் — (பிவீசி குழாய்கள் முதலியன)
அ) 11. ஏனைய பாவனைப் பொருள்கள் — (பிளாஸ்ரிக் வாளி, குப்பைக் கூடை சுவர்மணிக்கூடு முதலியன)
அ) 12. இரும்பு, பித்தளை, கன இரும்புப் பொருள்கள் — (பூட்டுக்கள், வாளி, மண்வெட்டி முதலியன)
அ) 13. சப்பாத்துக்கள், இறப்பர் செருப்புக்கள்
அ) 14. றெக்சின், பொலித்தீன் வகைகள்
அ) 15. மின்சார உபகரணங்கள், மின்சார உதிரிப் பாகங்கள், வயர், மின்குமிழ்கள், கோல்டர் பிளக் முதலியன)
அ) 16. இறப்பர் முத்திரைகள்.
அ) 17. மருந்து வகைகள்.
அ) 18. மெத்தைகள் (சியெஸ்டா) தலையணைகள், நுளம்பு வலைகள் முதலியன
அ) 19. அலுமினியப் பாத்திரங்கள் – (சமையலறைக்குரிய பெரிய பாத்திரங்கள் உட்பட)

### ஆ) சேவைகள்

ஆ) 01. உருக்குத் தளபாடத் திருத்தம்,
ஆ) 02. மரத் தளபாடத் திருத்தம்.
ஆ) 03. மின்சார இயந்திர, மின்சார உபகரணம் திருத்தம் (குளிர்சாதனப் பெட்டிகள், தொற்றுநீக்கி இயந்திரம், எக்ஸ்—கதிர் இயந்திரம், மோட்டார்கள், மின் பிறப்பாக்கிகள், உயிர் வைத்திய உபகரணம் உட்பட)
ஆ) 04. கட்டடத் திருத்தம்
ஆ) 05. அச்சு வேலைகள் (படிவங்கள் முதலியன)
ஆ) 06. நீர் இறைக்கும் இயந்திரம், கழிவு அகற்றும் இயந்திரம் திருத்தம்
ஆ) 07. நீர் விநியோகம், மலசல கூட வடிகால் திருத்தம்
ஆ) 08. போக்குவரத்துச் சேவை (பொருள்கள் ஏற்றி இறக்கல்)
ஆ) 09. மோட்டார் வாகனத் திருத்தம்
ஆ) 10. மோட்டார் வாகன சேவிஸ்
ஆ) 11. தட்டச்சு இயந்திரம், பிரதி எடுக்கும் இயந்திரம் (றோணியோ) நிழற் பிரதி எடுக்கும் இயந்திரம், தையல் இயந்திரம்: தொலைக்காட்சிப் பெட்டி, கணனி இயந்திரம் முதலியன (சேவிஸ் உட்பட திருத்தம்
ஆ) 12. அடையாள அட்டைகள் (புகைப்படம் எடுத்துத் தயாரித்து வழங்குதல்)
ஆ) 13. மோட்டார் மீள முறுக்குதல்

மேற்படி சேவைகளுக்காகப் பதிவு செய்துகொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப் படிவத்தை எனது பணிமனையில் ரூபா 100 பதிவுக் கட்டணமாகச் செலுத்திப் பெற்று 2000—12—26 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வைத்திய கலாநிதி
(செல்வி) நவமலர் கனகரத்தினம்
பணிப்பாளர்.

21—11—2000 (சி/13943)

## கிறிஸ்து அரசர் ஆலயம்

கொய்யாத் தோட்டம்

### 25 ஆவது வெள்ளிவிழா ஆண்டு திருவிழா நன்றித் திருப்பலி

நாள்: 26– 11– 2000 ஞாயிற்றுக்கிழமை

நேரம்: காலை 9. 00 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பங்குத் தந்தையும், பங்கு மக்களும்.

(80789)

## தொலைத் தொடர்பு (மோட்டோறோலா) உரிமையாளர் சங்கம்

### கருத்தரங்கு

காலம்: 26 - 11 - 2000 ஞாயிற்றுக்கிழமை
மு. ப. 9–30 மணி (புதிய நேரம்)

இடம்:- கொக்குவில் இந்துக் கல்லூரி

நிகழ்ச்சி நிரல்

1. மங்கள விளக்கேற்றல்
2. இறை வணக்கம்
3. தலைமையுரை
4. கருத்துரை வழங்குபவர்கள்

திரு. எஸ். பீ. சிவஞானம், L. LB.
உப தலைவர், தொலைத் தொடர்பு (மோட்டோறோலா) உரிமையாளர் சங்கம்

"பொதுசன தொடர்பு"

திரு. எஸ். அந்தனிராஜா
பிராந்திய முகாமையாளர், ஸ்ரீலங்கா ரெலிகொம், யாழ்ப்பாணம்.

'தொலைத் தொடர்பு சேவைகள்'

5. நன்றியுரை

✱ அனைத்து 'தொலைபேசி உரிமையாளர்களும் (Motorola & Cable – மோட்டோறோலா & கேபிள்) கலந்து கொள்ளும்படி அழைக்கப்படுகின்றார்கள்.

★ புதிய அங்கத்துவப் பதிவும் நடைபெறும்

த. தேவராஜா, தலைவர்
ஐ. நற்குணநாதன், செயலாளர்

(80783)

## இதய அஞ்சலி

எமது சக மாணவி M. யசோதாவின் அன்புக் கணவர்

### அமரர் A. முரளிதரன்

அவர்கள் அகால மரணம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

முதலாம் வருடம் முகாமைத்துவ மாணவர்கள்
யாழ் பல்கலைக்கழகம்.

(80766)

## கண்ணீர்ப் பூக்கள்

உரும்பிராய் வடக்கு
கணேசா சனசமூக நிலைய பொருளாளர்
திரு. சி. கெங்காதரன் அவர்களின்
பாசமிகு சகோதரி (புத்தூர் 9 ஆம் கட்டையடி)

### செல்வி சின்னத்துரை பேரின்பநாயகி

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

நிர்வாகசபை உறுப்பினர்கள்,
கணேசா சனசமூக நிலையம்.

உரும்பிராய் வடக்கு. (80789)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஆவரங்கால்
சிவன் தேவஸ்தான பிரதம குரு
**பிரம்மஸ்ரீ வே. நடராசக் குருக்கள்**
அவர்களின் ஏக புத்திரன்
**பிரம்மஸ்ரீ**
**யோகானந்தேஸ்வர சர்மா**
அவர்களுக்கு

ஆவரங்கால் பர்வதவர்த்தினி சமேத இராமலிங்கேஸ்வரப் பெருமான் திருவருள் முன்னிற்க மேற்படி தேவஸ்தானத்தில் கார்த்திகைத் திங்கள் 8 ஆம் நாள் **இன்று (23 - 11 - 2000) வியாழக்கிழமை** காலை 10.04—11.49 நிமிஷம் வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

திட்ஷாகுரு சாகித்திய சிரோமணி
**பிரம்மஸ்ரீ ப. முத்துக்குமாரசாமிக் குருக்கள்** அவர்களால் சிவாசாரிய அபிஷேகம் நிகழ்கின்றது. பிரம்மஸ்ரீ யோகானந்தேஸ்வரசர்மா சிவாசாரியர் ஆகி நித்திய நைமித்தியக் கிரியை, விழாக்களை நடத்தி மக்களுக்கு நல்லாசிகளை வழங்கிப் பல்லாண்டு காலம் இறைவன் பணிகளை மேற்கொள்ள வேண்டுமெனப் பாராட்டி நல்வாழ்த்துக்களை வழங்குகின்றோம்.

ஆவரங்கால் சிவன் தேவஸ்தான
தர்மகர்த்தா சபையினரும்,
கிராம மக்களும்.

(80773)

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம்

சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க
சமாச ஸ்தாபகரும் சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி
உதவி ஆணையாளருமாகிய
**அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம்**

அவர்களை இந்நாளில் அவரின் சேவையினை நினைவு கூர்ந்து அவரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

சிக்கன கடனுதவு
கூட்டுறவுச் சங்கங்களின் சமாச
கோப்பாய்ப் பிராந்தியம்.

(சி/13914)

# முதலாம் வருட நினைவஞ்சலி



## திருமதி சிவபாக்கியம் ஆறுமுகசாமி

பிறப்பு 16—07—1922
சிவபதம் 3—11—1999

எமது அன்புத் தெய்வம் சிவபதமடைந்து முதலாவது ஆண்டு நிறைவான இன்று அவரை அன்புடன் நினைவு கூருகின்றோம்.

ஆ. நாகேந்திரம் (அன்பு மகன்)
மற்றும் பிள்ளைகள், மருமகன்,
மருமகள், பேரப்பிள்ளைகள்.

கந்தன் பதி,
வரியப்புலம்,
கன்னாகம்.

[சி/13929]

# புதிய கிளை திறப்பு

வலி. கிழக்கு நவ. 23

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது கிளைக் கடை ஒன்றைக் கொக்குவில் நந்தாவில் அம்மன் ஆலயத்துக்கு அண்மையில் திறந்துள்ளது.

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எல்லைக்குட்பட்ட — தற்போது இடம் பெயர்ந்து நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில் வசிக்கின்ற — மக்கள் இச் சங்கக்கிளையில் இம் மாதம் தொடக்கம் உலர் உணவு நிவாரணத்தினைப் பெறமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை இவர்கள் கைதடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளையிலேயே நிவாரணப் பொருள்களைப்பெற்று வந்தனர். (ம—180)

# டிராக்டர் கொள்வனவு

நெடுந்தீவு, நவ. 23

நயினாதீவு மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகிப்பதற்காக வேலணை பிரதேச சபை டிராக்டர் ஒன்றைக் கொள்வனவு செய்துள்ளது.

வேலணைப்பிரதேச சபைத் தலைவர் எஸ். கருணாகர குருமூர்த்தி இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார். டிராக்டர் இந்த வாரம் நயினாதீவுக்கு வந்து சேரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ம-111)

# வில்லூன்றி மயானத்துக்கு சுற்றுமதில்

யாழ்ப்பாணம், நவ. 23

வில்லூன்றி இந்து மயானத்தைச் சுற்றி யாழ். மாநகர சபையினால் சுற்றுமதில் கட்டப்படவுள்ளது.

மதில் கட்டுவதற்காக 2 லட்சம் ரூபா வரை மாநகர சபையினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ம-5)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம், மீளாய்வு சம்பந்தமான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ் செயலகத்தில் நடைபெறவுள்ளது

யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் நடைபெறும் இந்தக் கலந்துரையாடலில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழான வேலைகள், வடக்கு மீள்குடியமர்வு புனர்வாழ்வு அதிகார சபையின் கீழான வேலைகள், சிறுவர் போசாக்குத்தொடர்பான வேலைத்திட்டங்கள் என்பன தொடர்பாக ஆராயப்படவுள்ளது. (ம-5-185)

# பல்கலைக்கழகத்துக்கு பதிவாளர் நியமனம் செய்யப்படவில்லை

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ். பல்கலைக்கழக பதிவாளர் நியமனத்துக்கான நேர்முகப் பரீட்சை கடந்த 10 ஆம் திகதி நடைபெற்ற போதும் எவரும் தெரிவு செய்யப்படவில்லையென பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் பதவிக்கு விண்ணப்பித்திருந்த அரச உயர் அதிகாரிகள் இருவரும் நேர்முகப் பரீட்சைக்கு சமகமளித்தபோதும் இவர்களில் எவரும் தெரிவுசெய்யப்படவில்லை

இதே வேளை —

பதிவாளரதுகடமைகளைத் தொடர்ந்தும் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் திருமதி தங்கராஜா மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-6)

# யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி விண்ணப்பம் கோரல்

2001 தை மாதத்தில் ஆரம்பமாகவிருக்கும் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர
உயர்பிரிவு — 9 மாதங்கள்.
2) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர
சாதாரண பிரிவு — 5 ½ மாதங்கள்.

விண்ணப்பப் பத்திரங்களையும், விவரங்களையும் ரூபா 10/- செலுத்தி கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி — 15.12.2000**

அதிபர்.

14, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி(13944)

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 06 — 10 — 1927



மறைவு 23 — 11 — 1990

## அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம்

(யாழ். மா. சி. க. கூ. ச. சமாசத்தின்
ஸ்தாபகரும் முன்னாள் தலைவரும்)

சமாசத்தின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றிய கூட்டுறவாளர் அமரர் ச. ஞானப்பிரகாசம் அவர்களின் 10 ஆவது ஆண்டினை நினைவு கூருகின்றோம்.

யாழ். மாவட்ட
சி. க. வ. கூ. ச. சமாசம்.

இல. 637 (383),
கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-13915)

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
14- 02- 1963

ஆண்டவன் அடியில்
23- 11- 1996



செல்வி
## சாந்தினி பாலகிருஷ்ணன்
(அரச தாதிய உத்தியோக சேவை)

புத்தப் புது மலரே பூரித்து நின்றவளே!
பக்குவமாய் நீ நடந்தால் பார்க்கும் நெஞ்சம்
பதகளிக்கும்
சித்திரமே தேர் தேடிச் சென்றவளே
தந்திரமாய் காலன் உனைத் தேடி வந்தானே.
வானத்தில் நீ பறக்க கை காட்டி நின்றோமே
வானமே பொய்த்ததடி விமான மூச்சு நின்றதடி
ஜோதியாய் நீ போனாய் எம் நெஞ்சம் வெடிக்குதம்மா!
சாதித்து என்ன கண்டோம் சாந்தினியே நீ இல்லை.
சாந்தி சாந்தி யென்று உன் ஆத்மா சாந்தி பெற
ஆண்டவனை வேண்டுகின்றோம் எம் மூச்சு
உள்ளவரை!

குடும்பத்தினர்,
உற்றார், உறவினர்,
சக தாதிய உத்தியோகத்தர்.

தும்பளை வீதி,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

(சி/13934)

# உதயன்

## உடன் தேவை; மேல்நீதிமன்றம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் மேல் நீதிமன்றம் உடனடியாக அமைக்கப்பட வேண்டும் என்று கோரி நகரில் நேற்று முன்தினம் ஊர்வலம் நடத்தப்பட்டது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமது பிள்ளைகளை, உறவினர்களை வவுனியாவுக்கு மாற்றுவதை நிறுத்த வேண்டும் என்பதும் ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களின் பிரதான கோரிக்கைகளில் ஒன்று.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இளைஞர், யுவதிகள், ஏனையோர் கைது செய்யப்படுவது இடைவெளி இன்றித் தொடர்கிறது. அத்தகையோர் மீதான வழக்குகளை மேல்நீதிமன்றத்திலேயே விசாரணை செய்ய வேண்டும் என்பது சட்டத்தின் நியதி.

யாழ்ப்பாணத்தில்கைது செய்யப்படுவோர், முன்னர் அனுராதபுரத்துக்குக் கூட்டிச் செல்லப்பட்டு, அவர்கள் மீதான வழக்குகள் அங்குள்ள மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன;

தடுத்து வைக்கப்படுவோரின் பெற்றோர்கள் அனுராதபுரத்தில் தங்குவதிலும் அங்குள்ள அதிகாரிகளுடன் தொடர்பு கொள்வதிலும் வழக்கறிஞர்களை அமர்த்துவதிலும் உள்ள கஷ்டங்கள்சுட்டிக்காட்டப்பட்டன அதனைத் தொடர்ந்து கைது செய்யபபடுவோர் இப்போது யாழ்ப்பாணத்திலேயே தடுத்து வைக்கப்படுகின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா செல்வதற்குஉரியபோக்குவரத்து வசதிகள் இல்லை. இங்கிருந்து அங்கு சென்று வருவதற்கு செலவும் அதிகம். கைதான பலரின் பெற்றோருக்கும் உறவினருக்கும் மேற்படி செல்வுக்கான பணவசதி இல்லை.

யாழ்ப்பாணத்திலேயே மேல் நீதிமன்றத்தை நிறுவினால் இந்தச் சிரமங்களையும் பணச் செலவுகளையும் தவிர்க்கலாம். கைதாவோரை அவர்களின் பெற்றோரும் உறவினர்களும் அடிக்கடி சென்று பார்த்துச் சுகம் விசாரிக்கலாம். அது ஒருவகை மன ஆறுதலைத் தரும்.

இத்தகைய காணரங்களை எடுத்துக்கூறி பல தரப்பினரும் விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் மேல் நீதிமன்றம் ஒன்றை அமைக்க நீதி அமைச்சு நடவடிக்கை எடுத்தது.

இதற்கிடையில் யாழ்ப்பாணத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர், யுவதிகளை வவுனியாவுக்கு மாற்றுவதற்கு அரச தரப்பில் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை எந்த வகையிலும் நியாயமற்றது.

யாழ்ப்பாணக் குடாநாடு இப்போது முழுக்க முழுக்க அரசாங்கத்தின் நிர்வாகத்தில் உள்ளது. இந்த மாவட்டத்தில் சட்டமும் ஒழுங்கும் நிலை நாட்டப்பட வேண்டும். சட்டத்தை அமுல் செய்யும் பொலீஸ் திணைக்களம் இயங்குகிறது. நீதி வழங்கும் நீதிமன்றங்கள் இயங்குகின்றன. மேல் நீதிமன்றமும் இப்போதைய சூழ் நிலையில் அவசரமாகத் தேவைப்படுகிறது.

இந்த மாவட்டத்துக்குரிய நியாயாதிக்கத்தை நிலை நிறுத்தி மேல்நீதிமன்றம் இங்கு உடன் ஆரம்பிக்கப்பட வேண்டும். அதேபோன்று இங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை வவுனியாவுக்கு மாற்றும் உத்தேசத்தைக் கைவிட வேண்டும். மக்களுக்குரிய வசதிகளைச் செய்வதை விடுத்து மேலும் மேலும் அவர்களுக்குக் கஷ்டங்களைக் கொடுத்து வருத்தக் கூடாது.

---

### அமெரிக்க அதிபர் பதவிக்கான தேர்தல்:

# கையால் எண்ணிய வாக்குகளை இறுதி முடிவில் சேர்க்க உத்தரவு

## புளோரிடா உச்ச நீதிமன்றம் தீர்ப்பு

மியாமி, நவ 23

அமெரிக்க அதிபர் தேர்தலின் இறுதி வாக்கு எண்ணிக்கையில் ஆள்கள் மூலம் புளோரிடாவில் எண்ணப்படும் வாக்குகளையும் சேர்க்க வேண்டும் என்று புளோரிடா உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 7ஆம் திகதி நடந்த அமெரிக்க அதிபர் பதவிக்கான தேர்தலில் புளோரிடா மாகாணத்தில் முதலில் கணனி மூலம் எண்ணப்பட்ட வாக்குகள் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் அல் கோர் விடுத்த கோரிக்கையின் படி 4 கவுண்டிகளில் ஆள்கள் மூலம் மீண்டும் எண்ணப்பட்டன. இதில் குடியரசுக் கட்சி வேட்பாளர் புஷ் அதிகம் பெற்றிருந்த வாக்குகள் 300 ஆகக் குறைந்தது.

இந்த எண்ணிக்கையை இறுதி முடிவில் சேர்க்க மாகாண ஆளுநர் மறுத்தார்.

இதனையடுத்து ஆள்கள் மூலம் எண்ணப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையை இறுதி முடிவில் சேர்க்க உத்தரவிடும்படி அல்கோர் புளோரிடா உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.

மேற்படி மனு மீதான விசாரணையை அடுத்து அளிக்கப்பட்ட தீர்ப்பில் அல்கோரின் கோரிக்கையை ஏற்ற நீதிபதிகள் குழு வேறு 3 கவுண்டிகளில் ஆள்கள் மூலம் நடந்த மறுவாக்கு எண்ணிக்கை குறித்த காலத்துக்குள் முடிவடையாததால் நிராகரித்து கீழ் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ரத்துச் செய்தது.

இந்தத் தீர்ப்பின் மூலம் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் அல்கோர் வெற்றிபெறும் வாய்ப்புகள் அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

வாக்குச்சீட்டுகளில் வாக்காளர்கள் இட்ட அடையாளங்களில் சிலவற்றைக் கணனி உணரத் தவறி, அவற்றைச் செல்லாத வாக்காகக் கணித்துவிடுகிறது. ஆனால் ஆள்கள் மூலம் எண்ணும் போது அவை உரிய வேட்பாளரின் வாக்காக எண்ணப்படுகின்றன.

தற்போது அல்கோர் தனக்குச் சாதகமான கவுண்டிகளில் மறு எண்ணிக்கையை நடத்துவதில் வெற்றிபெற்றதால் அல்கோர் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று கருதப்படுகிறது.

இதே சமயம், அல்கோருக்கு சாதகமான புளோரிடா நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து புஷ்ஷின் குடியரசுக் கட்சி அமெரிக்க மேல் நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்தால் அதிபர் தேர்தலின் இறுதிமுடிவை வெளியிடுவது தொடர்ந்து இழுபறி நிலையிலேயே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

## அல்ஜீரியாவில் 19 பேர் படுகொலை

ருனீசியா, நவ. 23

அல்ஜீரியாவில் இஸ்லாமிய அடிப்படைவாதிகள் ஒரு குழந்தை உட்பட 19 பேரைச் சுட்டுக் கொன்றுள்ளனர்.

1992 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் இஸ்லாமிய அடிப்படை வாதிகள் வென்ற போதிலும், அவர்களை ஆட்சி அமைக்க இராணுவ ஆட்சியாளர்கள் அனுமதி மறுத்ததில் இருந்து அங்கு ஆரம்பித்த பயங்கரவாதத்துக்கு இது வரை 1லட்சம் பேர் பலியாகியுள்ளனர்.

## ஆப்கானில் அரசு அமைய ஆதரவு

மொஸ்கோ, நவ. 23

ஆப்கானிஸ்தானில் அரசியல் தீர்வு ஒன்று கண்டு அங்கு நிலையான அரசு ஒன்றை அமைக்க வேண்டும் என்பதற்கு ரஷ்யாவும், இந்தியாவும் தமது ஆதரவை மீண்டும் உறுதிபடத் தெரிவித்துள்ளன.

இரு நாடுகளினதும் வெளிவிவகார அதிகாரிகள் கூட்டத்தின் முடிவில் இதனைத் தெரிவித்த அதிகாரி ஒருவர் சிவில் போராட்டத்தை இராணுவ முறையில் தீர்க்க முடியாது என்றும் கூறினார்.

---

# மமதாபானர்ஜியின் மிரட்டலுக்கு வாஜ்பாய் அடிபணிந்து விட்டார்

## பெர்ணான்டஸின் கட்சி விசனம்

புதுடில்லி, நவ. 23

பெற்றோலியப் பொருள்களின் விலையைக்குறைத்ததன் மூலம் மமதாவின் மிரட்டலுக்கு பிரதமர் வாஜ்பாய் அடிபணிந்து விட்டதாக பா.ஜ. கூட்டணியில் அங்கம் வகிக்கும் சமாதாக்கட்சி விசனம் தெரிவித்துள்ளது.

மத்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணான்டஸ் தலைமையிலான சமாதாக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ரகுநாத்சிங் நாடாளுமன்றத்தில் பேசுகையில்தமது கட்சியின் விசனத்தை வெளிப்படுத்தினார். முன்னர் அதிகரிக்கப்பட்ட சமையல் எரிவாயுவின் விலையைக் குறைத்ததன் மூலம் அரசு தனது பலவீனத்தை வெளிக்காட்டிவிட்டது. இது அரசுக்கும்,கட்சிக்கும் நல்லதல்ல பிரதமரின் முடிவு திருப்தியளிக்கவில்லை என்றும் ரகுநாத்சிங் தெரிவித்தார்.

கடந்த மாதம் மத்திய அரசு பெற்றோலியப்பொருள்களின் விலைகளை உயர்த்தியது. இதனை எதிர்த்து தேசிய ஜனநாயக முன்னணியில் அங்கம் வகிக்கும் திரிணாமுல் காங்கிரஸ் தலைவி மமதாபானர்ஜி தனது அமைச்சர் பதவியிலிருந்து விலகினார். பின்னர் விலைகளை குறைக்க பிரதமர் உறுதியளித்ததையடுத்து பதவி விலகலை விலக்கிக் கொண்டார். உறுதிமொழிக்கிணங்க மத்திய அமைச்சரவை நேற்று முதல் பெற்றோலியப் பொருள்களின் விலைகளை குறைத்திருந்தது. (ஒ–8)

---

## நாளை

கார்த்திகை 9

வெள்ளிக்கிழமை

திதி: சதுர்த்தசி பின் இரவு 4. 37 வரை.

நட்சத்திரம்: சுவாதி பி. ப. 3 . 57 வரை.

சுபநேரம்: 06. 12—07. 42

ராகுகாலம்: 10. 42—12. 12

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

---

### உதயவாக்கு

குறைவாய் வாக்குறுதி அளித்து அதிகமாய்ச் செய்.

—ஜெர்மன் பழமொழி

---

## கடற்படையின் உயர் அதிகாரி மீது ஊழல் வழக்கு

புதுடில்லி, நவ. 23

கோவாகப்பல் கூடத்தின் முன்னாள் தலைவர் ரியல் அட்மிரல் டி. ஆர். மேனன் மீது வருமானத்துக்கு அதிகமாகச் சொத்துச் சேர்த்ததாகக் குற்றஞ்சாட்டி மத்திய புலனாய்வுத் துறையினர் வழக்குத் தொடர்ந்தனர்.

கடந்த ஆண்டு இந்திய கடற்படை உயர் அதிகாரிகளிடம் சோதனைகள் நடத்திய போது மேனனுக்கு 70 லட்சம் ரூபா பெறுமதியான கணக்கில் காட்டப்படாத சொத்துக்கள் இருப்பதை வருமான வரித்துறையினர் கண்டு பிடித்திருந்தனர். (ஒ)

---

## வாசகர் திருமுகம்

# விமானப் பயணம் குறித்து 'றானு'க்கு ஒரு மடல்....

'றான்' ('RAAN') அலுவலகத்தில் முதலாவது நாளன்றே விமானப் பயணிகளுக்கான பெயர்ப் பதிவை முடித்துக் கொண்டு, அந்த மகிழ்வோடு இரண்டாவது விமான சேவைக்கான பயணச் சீட்டுப் பெறுவதற்காக கடந்த 17– 11– 2000 வெள்ளியன்று பிற்பகல் வரை காத்திருந்து, C.A.O. வினால் பெயர் கூப்பிடப்பட்டு விடுக்கப்பட்ட அறிவித்தலுக்கமைய மறுநாள் காலை 7. 30 மணிக்கு பயணத்திற்கு ஆயத்தமாக பிரத்தியேக வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி வந்து பயணச் சீட்டிற்காகக் காத்திருந்த வேளை பி. ப. 12 30 மணியளவில் அந்த அதிர்ச்சியான செய்தி காதில் நாராசமாக விழுந்தது.

பதின்மூன்று பயணிகளின் அன்றைய பயணம் ரத்துச் செய்யப்படுவதாகவும், அவர்களின் பயணம் அடுத்த திங்கட்கிழமை நடைபெறும் முதல் விமான சேவைக்கு மாற்றப்படுவதாகவும் இடியாக இறங்கியது.

வெளிமாவட்டங்களில் கடமை புரிபவர்கள், உள்நாட்டு வெளிநாட்டு மீள் பயணம் மேற்கொள்வோர், நோயாளர் மற்றும் அவசர தேவைகளுக்காக புறப்படுபவர்களுக்கென முன்னுரிமை கொடுத்து ஆதாரங்களுடன் ஒதுக்கப்பட்ட 13 பயணிகளின் ஆசனங்களே பறிக்கப்பட்டு,நாட்டிற்கு இன்றைய சூழலில் மிகமிக முக்கியமாகத் தேவைப்படும் 'கிரிக்கெட்' குழு ஒன்றிற்காக சிறப்புரிமை கொடுத்து வழங்கப்பட்ட கொடுமை நடந்தேறியதுஇதில் வேடிக்கைஎன்னவென்றால், நாட்டின் எதிர்கால நோயாளர்களுக்கான சேவையாற்றவென பட்டப்படிப்பு மேற்கொள்ளும் யாழ். மருத்துவபீட மாணவர்களே இந்தக் கைங்கரியத்தை மேற்கொண்டதுதான். பாதிக்கப்பட்ட 13 பயணிகளில் மிக முக்கியமான ஓர் உதாரணத்தை இங்கு சுட்டிக் காட்டுதல் பொருத்தம் என உணர்கிறேன்.

மகரகம வைத்தியசாலையில் இறுதி மூச்சிற்காகப் போராடிக் கொண்டிருக்கும் தனது கணவரை, தமது தந்தையைப் பார்ப்பதற்காகப் புறப்பட்ட மூன்று பயணிகள், மறுநாளே அவரின் மரணச் செய்தி கேட்டு மனமுடைந்து காணப்பட்டமை அனைவர் மனதையும் உருக்கும் செய்தியாகும். அவர்களின் பயணம் சனியன்றே நிறைவேறியிருந்தால் உயிருடனாவது பார்த்திருக்கக் கூடும். அத்துடன் அவர்கள் துயர் நின்றுவிடவில்லை. மறுநாள் திங்கட்கிழமை காலநிலை பாதிப்பால் தடை. செவ்வாய் நம்பிக்கையுடன் காத்திருக்கையில் விமானத்தின் இயந்திரக் கோளாறு காரணமான தடை. வவுனியா வரை எடுத்துவரபபட்டுக் காத்திருக்கும் சடலத்தையாவது பொறுப்பேற்று இறுதிக் கிரியைகள் கூட முடிக்க முடியாத அவல நிலையில் அந்தக் குடும்பம்.

இதன் தொடராக, அடுத்தடுத்த விமானங்களின் பயணத்திற்காகக் காத்திருக்கும் 13 பலிக்கடாக்கள்

இந்தப் பாதிப்புக்குள்ளான பயணிகளில் ஐவர், ஏற்கனவே 'றான்' அலுவலகத்திற்கும், அரசாங்க அதிபருக்கும், அதன் இணைப்பாளருக்கும், நன்றி தெரிவித்துத் தனித்தனியே கடிதம் எழுதத் திட்டமிட்டிருந்தோம். அது கைகூடவில்லை. இப்போது 'றானின்' செயல் திட்டத்தால் பாதிப்புற்று, இனி வரும் காலங்களிலாவது இத்தகைய திடீர் முடிவுகளை எடுக்க வேண்டாம் எனக் கோரியே தங்கள் பத்திரிகைக்கு இந்த நீண்ட மடலை அனுப்புகிறோம்.

தினசரி போகவும் வரவுமான பிரத்தியேக வாகனச் செலவு விரயத்துடனும், தாங்கொணா மன உளைச்சலுடனும் வருகை தரும் பயணிகளை பஸ்ஸில் ஏற்றிச் சென்று பலாலி விமான நிலையத்தைக் காட்டி வரும் செயலுக்கு முற்றுப்புள்ளி வைத்து விமானப் பயணத்தை யாழ்ப்பாணத்தில் வைத்தே உறுதிப்படுத்திய பின்னர் பஸ்ஸில் ஏற்றிச் செல்லுமாறு 'றான்' அதிகாரிகளை விநயத்துடன் கேட்டுக் கொள்கின்றோம்.

பயணிகளின் அசௌகரியங்களைத் தவிர்ப்பதும் தமது நற்பெயரைக் காப்பதுமான இரு காரியங்களை 'றான்' அவசியம் மேற்கொள்ள வேண்டும்.

பாதிக்கப்பட்ட பயணிகள் சார்பில்
வீ. கே. வியம்.

நுகவில்,
கரவெட்டி.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## அபூர்வ ஜோதிடம்

சித்தர் ஏடு மூலம் தீராத மர்ம நோய், சொல்லாமல் போய்விடல், பாவிகள் யோகியாக சிறந்த பலன் கிடைக்கும். தொடர்பு: ஆடியபாதம் வீதி, சரஸ்வதி மில் லேன், கொக்குவில் கிழக்கு. சனி, ஞாயிறு: 8.30-5.00 மணி வரை. (80765)

## நாய்க்குட்டிகள் விற்பனை

நல்ல இன ALSATION நாய்க் குட்டிகள் (கறுப்புக் குட்டிகள் உட்பட) விற்பனைக்குண்டு. தொடர்பு: தன பாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (80709)

## மணமகள் தேவை

சுவிஸ் நாட்டில் கடமை புரியும் புனர்பூசம் 1ஆம் பாதம் வயது 37, படித்த, அழகுள்ள இந்து சமய மணமகனுக்கு கௌரவ குடும்பத்திலிருந்து படித்த அழகுள்ள மணமகளை உறவினர் எதிர்பார்க்கின்றனர். மணமகன் கொழும்பு வந்து பெண்ணை அழைத்துச் செல்வார். சீதனம் பெற்றோர் விருப்பம். பூரண விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 1141 மே/பா உதயன். (80659)

இங்கிலாந்தில் உத்தியோகம் பார்க்கும் நிரந்தர உரிமை பெற்ற என்ஜினியரிங் பட்டதாரியாகிய 30 வயது மணமகனுக்கு, சிவந்த, அழகிய, படித்த பொருத்தமான மணமகளை பெற்றோர் தேடுகின்றனர். பொருத்தமுடையோர் ஜாதகம், கல்வி, புகைப்படம், தொழில், குடும்ப விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். சீதனம் பேசித் தீர்க்கலாம். விளம்பர இல. 1143, மே/பா உதயன். (80760)

## தவறிவிட்டது

கைதடி தெற்கு, கைதடி எனும் முகவரியைச் சேர்ந்தவர்களான முருகன் தெய்வானை என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 645422185v), விசேட அடையாள அட்டையும் மற்றும் சிவராசா உதயன என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல. 091001754) என்பன சுன்னாகம் சந்தைக்கும் தபால் கந்தோருக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கைதடி பல நோ.கூ. சங்கம், இணுவில் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (80755)

நாகர்கோயில் மேற்கு எனும் முகவரியுடைய அரியரத்தினம் சுபத்திரா என்பவருடைய வி.அ.அட்டை (இல. 091104918) 15.11.2000 அன்று 751 இலக்க பருத்தித்துறை பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து N. சிவரத்தினம், C/o அரியரத்தினம், முருகன் கோயிலடி, வல்வெட்டித்துறை எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (80774)

மீசாலை தெற்கைச் சேர்ந்த மார்க்கண்டு ரகுமாரன் ஆகிய எனது தே.அ.அட்டை (இல. 650250796v), வி.அ.அட்டை ஆகியவை நெல்லியடி லக்ஸ்மி தியேட்டருக்கு முன்பாகத் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நெல்லியடி, சாய்ராம் மருந்தகத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (c/13939)

இராசா யோகநாதன் என்பவருடைய தே.அ.அட்டை (இல. 640653140v), கடற்றொழில் பாஸ (இல.167) என்பன ஆனைக்கோட்டை சாவற்காடு பகுதியில் 14.11.2000 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சாவற்காடு சனசமூக நிலையத்தில் ஒப்படைக்கவும். (80777)

## தவறிவிட்டது

கொடிகாமத்தைச் சேர்ந்த கணையவிற்பாதசம்பந்தர் சிறீகரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.491010622v) பருத்தித்துறைக்கும் மானிப்பாய்க்கும் இடையில் பஸ் பயணத்தின் போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தெகனை, மாரம்புலம் பிள்ளையார் கோயிலடி, அல்வாய் (உபதபால் கந்தோர் அருகில்) எனும் முகவரியில ஒப்படைக்கவும். (80756)

## காந்தி பற்றிய திரைப்படம்

யாழ்ப்பாணம் நவ.23

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கும் காந்தி பற்றிய திரைப்பட வரிசையில் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு ஷியாம் பெனகலின் 'உருவாக்கப்படும் மகாத்மா' என்ற ஆங்கிலப்படம் காண்பிக்கப்படும். (ம)

# நன்றி நவில்கின்றோம்

சாவகச்சேரி நகர் வணிகர்கள் தங்கள் சேதமடைந்த கடைகளின் ஆவணங்களையும் பொருள்களையும் மீட்பதற்கு பேருதவி புரிந்த யாழ். மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்

**திரு. தி. மகேஸ்வரன்** அவர்களுக்கு

*எமது மன்றின் சார்பில் மனம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

**கைத்தொழில் வணிகர் மன்றம்,**
**சாவகச்சேரி.**

*கொடிகாமம் வீதி, கரவெட்டி.* (80775)

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 19 - 10 - 1940

மறைவு 06 - 12 - 1999

## அமரர் இராசா கனகசுந்தரம்

(ஸ்தாபனம் - துரை அன் கோ)

திதி: திரயோதசி (23-11-2000)

அண்ணா! என்னை விட்டுப் பிரிந்து
ஓராண்டு சென்றாலும் - உம் நினைவு
என் நெஞ்சில் என்றும் அகலாது!

*541, மாணிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.*

- சகோதரி

(80776)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 27 - 07 - 1929

மறைவு: 24 - 10 - 2000

## அமரர் கந்தையா பரராஜசிங்கம்

(இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன முன்னாள் லிகிதர்)

அன்பின் திருவுருவே!
பாசத்தின் ஒளிவிளக்கே!
உங்கள் அன்பு முகம் காணாமல்
கண்மூடி இமைப்பதற்குள்
ஜோதியாய் கலந்தாயோ?
உங்கள் அரவணைப்பில் தவழ
மீண்டும் வருவீர்களா?

உங்கள் பிரிவால் துயருறும்
**மனைவி, மக்கள்.**

*பூமனை லேன், மருதனார்மடம்.*

(80744)

உ

# சிவாசார்ய அபிஷேக அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் விக்கிரம வருஷம் கார்த்திகை மாதம் 8ஆம் திகதி இன்று (23.11.2000) வியாழக்கிழமை காலை 10 மணி 04 நிமிஷம் தொடக்கம் 11 மணி 49 நிமிஷம் வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

ஆவரங்கால் சிவன் தேவஸ்தான பிரதமகுரு
**பிரம்மஸ்ரீ வே.நடராஜக் குருக்கள் அவர்களின்**
ஏகபுத்திரன்
**பிரம்மஸ்ரீ யோகானந்தேஸ்வர சர்மா**
அவர்களுக்கு

ஆவரங்கால் பர்வதவர்த்தினி சமேத ராமலிங்கேஸ்வரர் திருவருளை முன்னிட்டு மேற்படி தேவஸ்தானத்தில் சிவாசார்ய அபிஷேகம் நிகழ்த்துவதற்குப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராகக் கலந்துகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றேன்.

தீக்ஷா குரு:
சாஹித்ய சிரோமணி
பிரம்மஸ்ரீ ப.முத்துக்குமாரசாமிக் குருக்கள்

*சிவன் கோயில், ஆவரங்கால், புத்தூர்.*

(80754)

*பிரம்மஸ்ரீ வே.நடராஜக் குருக்கள், ந. விஜயலக்ஷ்மி அம்மா.*

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



பிறப்பு 08 - 10 - 1960

இறப்பு 25 - 10 - 2000

## கந்தப்பு தவராசா (பவா)

(நெல்லியடி சந்தைக் குத்தகையாளர்)

அன்பின் திருவுருவாய் பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் குலவிளக்காய் கடமையிலே கண்ணியனாய்
நேற்று வரை நீயிருந்தாய் எம்மோடு சிரித்தபடி
பவா என்ற ஒருவடிவம் பாரினிற் காணோமோ!
இன்றெங்கே சென்றுவிட்டாய் காற்றுடன் கலந்தபடி
முப்பது நாளென்ன முந்நூறே யானாலும்
நீங்காது எம்நெஞ்சில் நிஜமாய் நிலைத்திருப்பாய்!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

எமது வீட்டில் நாளை (24-11-2000) வெள்ளியன்று நடைபெறும் அந்தியேட்டி, சபிண்டீகரண நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

*மாணிக்கவாசகர் வீதி, கரவெட்டி மத்தி, கரவெட்டி.*

குடும்பத்தினர்
**மனைவி, பிள்ளைகள், தாய்.**

(C/13905)

# தமிழ்க் கட்சிகளின் ஆயுதங்கள் உடன் களையப்படவேண்டும்

## பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம்,நவ.23

நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவும் ஜனநாயக வாழ்க்கை முறையைப் பலப்படுத்தவும் ஏதுவாக சகல தமிழ்க் கட்சிகளிடமும் உள்ள ஆயுதங்கள் களையப்படவேண்டும்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று நடத்திய ஊர்வலத்தை அடுத்து அரச அதிபர் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ்மக்கள் தாக்கப்படும்போதும் அவர்கள் உரிமைகள் பறிக்கப்படும் போதும் பல்கலைக்கழக மாணவர்கள் கண்டனக் குரல் கொடுக்கத் தவறியதில்லை.

யாழ்.நகரில் இராணுவ முகாமுக்கு அண்மையில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த சமயத்தில் பத்திரிகையாளர் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டுள்ளார். தங்களின் பொறுப்பிலுள்ள பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலீஸாரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

நிமலராஜனின் கொலை தார்மீகம் மற்றும் பேச்சு உரிமையின் குரல் வளையை நெரிப்பதாகும்.

இந்தக் குற்றச் செயலை செய்திருக்கக் கூடியவர்களை ஏற்கனவே சுதந்திர ஊடகவியலாளர் ஒன்றியம் குறிப்பிட்டிருந்ததை மேன்மை தங்கிய தாங்கள் அறிந்திருப்பீர்கள்.

ஆகவே விரைவான, பாரபட்சமற்ற விசாரணை நடத்தி குற்றவாளிகளை தண்டிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழர்கள் குண்டர்களால் கொடூரமான முறையில் கற்களால் தாக்கப்பட்டும், வாளால் வெட்டப்பட்டும், எரிக்கப்பட்டும் கொல்லப்பட்டனர்.

இந்தக் கொடூரக் கொலைகள் எதிர்காலத்தில் தமிழர்களும் சிங்களவர்களும் ஒன்றாக இலங்கையில் வாழமுடியாது என்ற ஆழமான எண்ணத்தை உருவாக்கிவிட்டன.

இந்தக் கொலைகளுக்கு அரசாங்கம் பொறுப்பேற்று பாரபட்சமற்ற விசாரணை நடத்தி குற்றத்துக்குப் பொறுப்பானவர்களை தண்டிக்க வேண்டும்.

தமிழர்களின் சுதந்திரப் போராட்டத்துக்கு வெலிக்கடைச் சிறைப் படுகொலைகளும் ஒரு காரணம் என்பதை மேன்மை தங்கிய தங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றோம்.

சிங்களப் பகுதிகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்துத் தமிழர்களையும் தமிழ்ப் பகுதிகளுக்கு மாற்ற வேண்டும்.

இடம்பெயர்ந்த மீனவர்கள் தாம் இடம்பெயர்ந்த இடங்களில் மீன் பிடிக்க அனுமதிக்கப்பட வேண்டும். அவர்களின் மீன்பிடி நேரமும் பிரதேசமும் அதிகரிக்கப்பட வேண்டும்- என்றுள்ளது. (இ-ஒ)

# கடத்திச் சென்ற வாகனத்தை புலிகள் திருப்பி ஒப்படைத்தனர்

கொழும்பு,நவ.23

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 15 ஆம் திகதி விடுதலைப் புலிகளால் கடத்திச் செல்லப்பட்ட கட்டடத் திணைக்களத்துக்குச் சொந்தமான மாருதி ஜீப் நேற்றுமுன்தினம் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

அந்த மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டுவரும் வாகனங்களை எடுக்கவேண்டாம் என்று செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு கேட்டுக்கொண்டதை அடுத்து இந்த வாகனத்தைப் புலிகள் திருப்பி ஒப்படைத்ததாகவும் அது மேலும் கூறியுள்ளது. (இ-3)

# புலிகள் தரப்பில் அறுவர் உயிரிழப்பு

வவுனியா,நவ.23

வெவ்வேறு சம்பவங்களின்போது தமது தரப்பில் உயிரிழந்த ஆறு பேரின் பெயர் விவரங்களை விடுதலைப் புலிகள் தமது 'புலிகளின் குரல்' வானொலி மூலம் அறிவித்தனர்.

கடந்த 15 ஆம்திகதி வன்னியில் இடம்பெற்ற தவறுதலான வெடி விபத்தில் கப்டன் நிருபா (தம்பிரட்ணம் குமாரி - மட்டக்களப்பு), 2ஆம் லெப்ரினன்ட் எல்வனி (சீத்தாராம் கங்கேஸ்வரி - மட்டக்களப்பு), குசாயினி (செல்வராசா மங்கயற்கரசி - மட்டக்களப்பு) ஆகியோரும்-

கடந்த 16 ஆம் திகதி மட்டக்களப்பு பத்தரைக் கட்டைப்பகுதியில் படையினருடன் இடம்பெற்ற நேரடி மோதலில் கப்டன் உமையாளன் (வீரசிங்கம் ரவீந்திரன் - மட்டக்களப்பு) என்பவரும் -

கடந்த 19 ஆம் திகதி கனகம்புளியடி, கல்வயல் பகுதிகளில் படையினர் மேற்கொண்ட முன்னேற்ற முயற்சியில் மலர்விழி (வில்வராசா ரோசானி - யாழ்ப்பாணம்), முகிலினி (சிற்றம்பலம் வசந்தமாலினி) ஆகியோரும் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டது. (உ-8)

தெற்காசிய விவகாரங்களுக்கான

# அமெரிக்க உதவிச் செயலர் திங்களன்று இலங்கை வருகை

கொழும்பு,நவ.23

தெற்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவிச் செயலர் கால் எஸ்.இன்டர்பேத் எதிர்வரும் திங்கட்கிழமை இலங்கை வருகின்றார்.

கிழக்குத் தெற்காசியப் பணிப்பாளர் டொனால்ட் கான், தெற்காசிய விவகாரப் பணியகத்தின் பணிப்பாளர் ஆகியோரும் அவருடன் வருகை தருகின்றனர்.

இங்கு தங்கியிருக்கும் சமயம் அரசியல் கட்சித் தலைவர்கள், அரசசார்பற்ற அமைப்புப் பிரதிநிதிகள்ஆகியோருடன் அவர் பலதரப்பட்ட விடயங்கள் குறித்துக் கலந்துரையாடுவார். (இ-3-8)

# தொண்டமனாறு கடலில் பெண்ணின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம்,நவ.23

தொண்டமனாறுக் கடற்கரைப் பகுதியில் மீட்கப்பட்டதாகத் தெரிவித்து அச்சுவேலிப் பொலீஸாரினால் நேற்றுப் பிற்பகல் 5 மணியளவில் பெண் ஒருவரின் சடலம் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

இராணுவத்தினர் கொடுத்த தகவலை அடுத்து அச்சுவேலிப் பொலீஸார் இந்தச் சடலத்தை நேற்றுக் காலை 8 மணியளவில் கடலில் இருந்து மீட்டனர்.

சாறியுடன் காணப்பட்ட மேற்படி சடலம் சுமார் 77 வயதுப் பெண் ஒருவருடையதாக இருக்கலாம் என்றும்-

இவர் இறந்து 7 அல்லது 8 நாள்கள் ஆகியிருக்கும் என்றும்- பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தச் சடலம் அடையாளம் காணும் பொருட்டும் மேலதிக விசாரணைகளுக்காகவும் யாழ்.போதனா ஆஸ்பத்திரியின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (இ-6-5-10)

## பிரதி அமைச்சர் லயனல் காலமானார்

யாழ்ப்பாணம்,நவ.23

பிரதி சுகாதார அமைச்சர் லயனல் குணவர்த்தன நேற்றுக்காலை மாரடைப்பால் காலமானார்.

நேற்று வைபவம் ஒன்றில் கலந்துகொண்டிருந்தசமயம் மாரடைப்புக்குள்ளான அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதும் அங்கு மரணமானார்.

கடந்த தேர்தலில் அவர் ஹம்பகா மாவட்டத்தில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகி இருந்தார். (3-8)

## வருகை தரக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.23

பளை மத்திய கல்லூரியில் கற்கும் - 1999ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து அதற்கான கொடுப்பனவு பெறும் மாணவர்களை வடமராட்சி ஞானசாரியார் பாடசாலையில் தற்போது இயங்கிவரும் கல்லூரிக்கு எதிர்வரும் 27ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு வருமாறு அதிபர் கே.குணபாலசிங்கம் கோரியுள்ளார் (ம)

## குடும்பஸ்தர் கைது

யாழ்ப்பாணம்,நவ.23

நீர்வேலிப் பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அவரின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நீர்வேலி வடக்கு, செம்பாட்டுப் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த சீனித்தம்பி ஈஸ்வரன் (வயது 49) என்பவரே கைது செய்யப்பட்டவர் ஆவார்.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் இரவு நேரக் காவலாளியான இவர் கடந்த திங்களன்று மாலை 5 மணியளவில் வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரது கைது தொடர்பாக படையினரால் 'ரிசீற்' வழங்கப்பட்டுள்ளது. (இ-10)

## செஞ்சிலுவை கப்பலில் தபால் பொதி

யாழ்ப்பாணம்,நவ 23

பருத்தித்துறைக்கு இன்று வந்து சேரும் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் நோயாளர் கப்பலில் மருந்துப் பொருள்களும் தபால் பொதிகளும் எடுத்து வரப்படுகின்றன.

எதிர்வரும் 1?ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி.சீ.ஈ (சாதாரணதர) பரீட்சைக்கான காகிதாதிகளும் இந்தக் கப்பலில் எடுத்து வரப்படுகின்றன. (இ-3-10-139)

## நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதி



குடாநாட்டு மக்களின் அவல வாழ்வை உலகுக்கு அம்பலப்படுத்தும் புனிதமான பத்திரிகைப் பணியில் துணிச்சலுடன் ஈடுபட்டு, மிரட்டல்களுக்கு அடிபணியாமல் கடமைக்காகத் தன் உயிர் ஈந்த சகோதரப் பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் இளம் குடும்பத்துக்கு குடாநாட்டின் சமூகத்தின் சார்பில் தினைத்துணையேனும் கைம்மாறு செய்யும் ஒரு முயற்சியை 'உதயன்' ஆரம்பித்திருக்கின்றான் என்ற செய்தியை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

பத்திரிகைப் பணிக்காக தனது குடும்பத் தலைவனையே பறிகொடுத்த அந்த இளம் குடும்பத்துக்கு குடாநாட்டுச் சமூகம் தனது பங்களிப்புமிக்க ஒத்துழைப்பை வழங்கி வருகிறது.

★ உதவி நிதியை நேரில் 'உதயன்' பணிமனையில் பணமாகக் கையளிப்போருக்கு உடன் பற்றுச்சீட்டு வழங்கப்படுகிறது.

★ காசோலை மூலமாக அனுப்ப விரும்புவோர் மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளையில் இதற்கெனத் தொடங்கப்பட்டுள்ள **C/A 2358** ஆம் இலக்கக் கணக்குக்கு அனுப்பவும். வெளிமாவட்டங்களில் இருந்து நன்கொடை அனுப்புவோர் மேற்படி கணக்கு இலக்கத்துக்குத் தொலைநகல் மாற்றம் (Fax Transfer) மூலம் அனுப்பவும்.

★ மேற்படி நிதிக்குப் பணம் சேகரிப்பதற்கு வெளியார் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்பதனை அறியத்தருகின்றோம்.

★ நன்கொடை வழங்குவோரின் பெயர், விவரம் உதயனில் பிரசுரிக்கப்படும். பெயர் குறிப்பிட விரும்பாத அன்பர்களுக்கு உரிய முறையில் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டு தொகை விவரம் பெயரின்றியே வெளியிடப்படும்.

குறிப்பு:- இந்நிதிக்குப் பணம் சேகரிப்பதாகக் கூறி சில மோசடியாளர்கள் படிவங்களைத் தயாரித்து பொதுமக்களிடம் நன்கொடை கேட்டுச் செல்வதாக அறியவந்துள்ளது. இது விடயத்தில் எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**21.11.2000 (செவ்வாய்க்கிழமை) வரை கிடைத்த நிதி:-**

| | | ரூபா |
|---|---|---|
| | முன்கொண்டுவரப்பட்டது | 817,539 |
| 1. | விவேகானந்தா விளையாட்டுக்கழகம் - சுழிபுரம் கிழக்கு | 750 |
| 2. | ஆனந்தசுந்தரம் - ஏழாலை தெற்கு, ஏழாலை | 100 |
| 3. | மாகாணப் பணிப்பாளர், பிறதம பொறியியலாளர் அலுவலகம் நலன்புரிச் சங்கம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம் | 5,000 |
| 4. | ஓர் அன்பர் - நாச்சிமார் கோவிலடி | 200 |
| 5. | எம்.சின்னத்துரை (J.P) - குகன்குடிசை பொலிகண்டி-வல்வெட்டித்துறை (வங்கியூடாக) | 500 |
| 6. | தென்.கிழ.பலநோ.கூ.சங்கம் - கொடிகாமம் | 1,000 |
| 7. | சி.புவனேந்திரன் - மாலுசந்தி அல்வாய் | 100 |
| 8. | ஓர் அன்பர் - மட்டுவில் தெற்கு | 200 |
| 9. | சகோதரன் - 2ஆம் வருடம் வணிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம் | 300 |
| 10. | ஓர் அன்பர் - 28, 2ஆம் ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம் | 200 |
| 11. | துணிச்சலுடன் பணியாற்றிய 'மறத் தமிழனைப் பாராட்டி ஒரு சகோதரி - மணல்தரை ஒழுங்கை, கந்தர்மடம் | 1,000 |
| | மொத்தம் | 826,919 |


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையின் அதிபர்

திரு.செ.குபேரநாதன் அவர்கள்

01.06.1994 முதல் அதிபர் தரம் 1க்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளதையிட்டு அவரை உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



அவரது பணி மேன்மேலும் சிறந்து விளங்க எல்லாம்வல்ல சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் அருள் புரிவாராக!

ஆசிரியர் கழகம்,
மாணவர்கள்; அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர்கள்;
யாழ். சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்.
மானிப்பாய்.

## வாழ்த்துக்கள்

மாவட்ட முகாமைக்கு உயர்ந்து செல்லும்,
இனிய கனிவான பேச்சும்,
மலர்ந்த முகத்துடன் சேவை புரியும்,
உயர்திரு.சி.நடராஜலிங்கம்
(முகாமையாளர், இலங்கை வங்கி - பருத்தித்துறை)
அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

திருமதி சிவகாமி சின்னத்தம்பி
இளைப்பாறிய அதிபர்
(ஓய்வூதிய வாடிக்கையாளர்)

விக்னேஸ்வரா வீதி,
கரவெட்டி. (C/13950)

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் வள்ளிப்பிள்ளை

(வாரிவளவு, காரைநகர்)

காரைநகர் வாரிவளவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்பொழுது தட்டாதெரு சந்தியடி யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவருமான பொன்னம்பலம் - வள்ளிப்பிள்ளை நேற்று (22.11.2000) புதன்கிழமை இறைவனடி எய்திவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சண்முகம் பொன்னம்பலம் (உரிமையாளர், S.P.அன்சன்ஸ் - நாவான்வெல) அவர்களின் அன்பு மனைவியாவார்.

இவரது இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2000) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு கோம்பையன்மணல் இந்து மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ.சிவப்பிரகாசம் (மகன்)
(S.P. அன்சன்ஸ் சுன்னாகம்)

தட்டாதெரு சந்தி,
யாழ்ப்பாணம். (80812)

# யுத்தத்தை நிறுத்தி பேச்சுக்களை ஆரம்பித்தால் ஐக்கிய இலங்கையும் சுயாட்சியும் சாத்தியமே

## பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் சொல்கிறார்

கொழும்பு,நவ.23

இலங்கை அரசாங்கம் நாட்டின் ஐக்கியத்தை- ஆள்புல இறைமையை - வலியுறுத்துகிறது. விடுதலைப் புலிகளின் இலக்கு சுயாட்சியாக உள்ளது. இந்த இரண்டும் எய்தப்படக் கூடியவை என்றே நான் நம்புகின்றேன். ஆனால் அது நடைபெறுவதற்கு யுத்தம் நிறுத்தப்பட வேண்டும்; பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு பிரிட்டனின் வெளியுறவுகளுக்கான ராஜாங்க அமைச்சர் பீற்றர் ஹெய்ன் பிரிட்டிஷ் கவுன்ஸிலில் "மாற்றத்தின் ஊடாகச் சமாதானம்-பிரிட்டனின் அதிகாரப் பரவல் அனுபவம்" என்ற தலைப்பில் நேற்றுப் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

நான் சந்தித்து உரையாடிய எல்லோருமே இந்த நாட்டின் அரசியல், பொருளாதார விவகாரங்களில் இனப் பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காணப்பட வேண்டும் என்பதற்கே முதலிடம் கொடுக்கப்பட வேண்டும் என்று ஒப்புக்கொள்கிறார்கள்.



இனப்பிரச்சினையால் இந்த நாட்டில் ஏற்பட்ட உயிரிழப்புகள், தடைப்பட்ட அபிவிருத்தி என்பன கவலை தருவதாக உள்ளன.

சமாதானத் தீர்வைக் காணும் முயற்சியில் உதவுமாறு கேட்டுக் கொள்ளப்படும் பட்சத்தில் அவ்வாறு செய்வதில் பிரிட்டன் ஆவலாக உள்ளது. இலங்கைக்கு உள்ளிருந்து வருகின்ற ஒரு தீர்வே நின்று நிலைக்கக்கூடியதாகும். வெளியிலிருப்போர் மந்திரக் கோலால் விசிறி நிலைமையைச் சீராக்க முடியாது.

இப்போது நடைபெறும் யுத்தம் இரண்டு பகுதியினராலும் வெல்லப்பட முடியாத ஒன்றாகும். பண்பற்ற படுகொலைகளுக்குக் காரணமாக இருந்திருக்கக்கூடிய, ஆனால் தவிர்க்கப்பட முடியாத, கவனம் செலுத்தப்பட வேண்டிய சட்ட பூர்வமான ஓர் அரசியல் வேலைத் திட்டத்தைக் கொண்டிருப்பவர்களுடன் அமர்ந்து பேசுவதற்கு, மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் தயாராக இருக்க வேண்டும். இல்லாவிடில் இந்த முரண்பாட்டைத் தீர்க்க முடியாது.

இந்தப் பாடத்தைக் கற்றுக் கொள்ள பிரித்தானியாவில் எமக்கு நீண்ட காலம் பிடித்தது. அதனால் அதிக உயிர்களை இழக்கவும் நேரிட்டது.

அதேவேளை, ஐ.ஆர்.ஏயைப் போன்று, விடுதலைப் புலிகளும் ஒன்றை ஏற்றுக்கொள்ள வேண்டும். இலங்கைத்தீவின் சில பாகங்களைப் பிரித்தெடுத்து நிறுவப்படும் அரசு ஒரு போதும் ஐரோப்பிய நாடுகளினதோ, பிரிட்டன், அமெரிக்கா மற்றும் இந்தியாவினதோ அங்கீகாரத்தைப் பெறமாட்டாது.

ஆனால், சுயநிர்ணயக் கோட்பாட்டையும் மக்களின் நாளாந்த வாழ்க்கையைப் பாதிக்கும் முக்கிய விடயங்கள் மீதான கட்டுப்பாடுகள் சம்பந்தமான கொள்கைகளையும் சர்வதேச சமூகம் ஆதரிக்கும்.

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பிலான பிரித்தானிய அனுபவம் பிரிட்டனின் ஒருமைப்பாட்டைப் பேணியிருக்கின்ற அதேவேளை, அதன் பன்முகத் தன்மையைப் பலப்படுத்தியிருக்கிறது - என்று சொன்னார்.

வட அயர்லாந்து சம்பந்தமான "பெரிய பெள்ளி ஒப்பந்தம்" முறிந்த பின்னணியையும், அதனால் உச்ச நிலைக்குக் கொண்டு வரப்பட்ட அதிகாரப் பரவலாக்கல் முறையையும், பின்னர் உண்டான பின்னடைவுகளையும் பீற்றர் ஹெய்ன் தமது உரையில் விரிவாக விளக்கினார். தங்கள் நாட்டு அனுபவம் எவ்வாறு இலங்கைக்கு உதவும் என்பதனையும் அவர் தமது உரையில் கோடிட்டுக் காட்டினார். (அ)

## எழுதுமட்டுவாழ், மட்டுவில் பகுதிகளில் மோதல்

கொழும்பு,நவ.23

எழுதுமட்டுவாழ் மற்றும் மட்டுவில் தெற்குப் பகுதிகளில் உள்ள படையினரின் முன்னரங்க நிலைகளில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் மோதல் இடம்பெற்றது என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இந்த மோதலில் விடுதலைப்புலி உறுப்பினர்கள் அறுவர் உயிரிழந்தனர் என்றும் அது தெரிவித்தது.

## கிழக்கில் வழமை நிலை திரும்புகிறது

மட்டக்களப்பு,நவ.23

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் கடந்த மூன்று நாள்களாகப் பெய்த கடும் மழையில் பாதிக்கப்பட்ட இயல்பு வாழ்க்கை தற்போது வழமைக்குத் திரும்பி வருவதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு வடக்குப் புனர்வாழ்வு புனரமைப்பு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதிக்கும் சமூக சேவைகள் அமைச்சருக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-8)

## பல்கலைக்கழக.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றலிலிருந்து ஆரம்பமானது.

அங்கிருந்து இராமநாதன் வீதி வழியாக பலாலி வீதி, பழம் றோட், அரசடி வீதி, கோயில் வீதி, றக்கா வீதி, கச்சேரி - நல்லூர் வீதியூடாகப் பேரணி முற்பகல் 11.00 மணிக்கு யாழ். செயலகத்தைச் சென்றடைந்தது.

கடும் மழை பெய்த போதிலும் மாணவர்கள் தொடர்ந்து பேரணியாகச் சென்றனர். பேரணி சென்ற பாதைகளில் இராணுவத்தினர் தடுத்து விசாரித்த போதிலும் மாணவர்களைத் தடுத்து நிறுத்தவில்லை.

பேரணி வந்த வீதிகளில் மாணவர்கள் மிகுந்த ஆக்ரோஷத்துடன் கோஷங்களை எழுப்பினர்.ஏராளமான சுலோக அட்டைகளையும் தாங்கிச் சென்றனர்.

ஈ.பி.டி.பி. கட்சியையும் அரசாங்கத்தையும் கடுமையாகக் கண்டிக்கும் வகையில் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

அரசே அவசரகாலச் சட்டத்தை நீக்கு!, பல்கலைக்கழக மாணவர்களின் விடுதியில் இராணுவமே நுழையாதே!, ஈ.பி.டி.பியே தமிழீழத்தை விட்டு வெளியேறு! என்பன உட்பட பெரும் எண்ணிக்கையான வெவ்வேறு கோஷங்களை மாணவர்கள் எழுப்பினர். சுலோக அட்டைகளில் பண்டாரவளைப் படுகொலை மற்றும் பத்திரிகையாளர் சுதந்திரத்தைப் பறிப்பதைச் சித்திரிக்கும் 'கார்ட்டூன்'களும் காணப்பட்டன.

ஆயிரக்கணக்கில் பல்கலைக்கழக மாணவர்கள் செயலக வளவில் வந்து திரளத் தொடங்கியதும் அங்கு பணிகள் யாவும் ஸ்தம்பிதம் அடைந்தன.

பல்கலைக்கழக மாணவர்களினால் செயலக வளவு நிறைந்து காணப்பட்டதை அடுத்து செயலகத்துக்கு வெளியே பெருமளவு பொலீஸார் அங்கு வந்து குவிந்த, மாணவர்களை அவதானித்தனர்.

யாழ்.செயலக வளவுக்குள் நுழைந்த மாணவர்கள் தாம் ஏந்தி வந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஆகியோரைச் சித்திரிக்கும் 'கார்டூன்'களை எரித்தனர்.

செயலக முன்றலில் திரண்ட மாணவர்கள் யாழ். அரச அதிபர், மற்றும் மேலதிக அரச அதிபர், செயலக அதிகாரிகள் முன்னிலையில் கொட்டும் மழையிலும் கண்டனக் கூட்டத்தை நடத்தினார்கள்.

இக்கூட்டத்தில் யாழ்.பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீட மாணவர்களின் பிரதிநிதிகளும் கண்டன உரைகளை நிகழ்த்தினார்கள்.

★ பண்டாரவளை தடுப்புமுகாம் சம்பவங்களில் ஈடுபட்ட குற்றவாளிகளையும், பத்திரிகையாளர் ம.நிமலராஜனைப் படுகொலை செய்தவர்களையும் கண்டுபிடித்து குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி கடும் தண்டனைகள் வழங்கப்பட வேண்டும்.

★ தமிழ்க் கட்சிகளிடமிருந்து ஆயுதங்கள் களையப்பட வேண்டும்.

★ குடாக் கடலில் மீன்பிடிக்கும் நேரம், தூரம் அதிகரிக்கப்பட வேண்டும்.

★ தென்பகுதிகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளை அவர்களின் பாதுகாப்புக் கருதி தமிழ்ப் பிரதேசங்களுக்கு மாற்றம் செய்ய வேண்டும்- என்ற அம்சங்களுக்கு கூட்டத்தில் உரையாற்றிய மாணவர்கள் முக்கியத்துவம் கொடுத்துப் பேசினர்.

எமது கோரிக்கைகளை மூடி மறைக்காது அரசுக்கு அரசாங்க அதிபர் எடுத்துக் கூற வேண்டும் என்றும் மாணவர்கள் வலியுறுத்தினார்கள்.

கூட்டத்தின் இறுதியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு முகவரி இடப்பட்ட மகஜரை யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் இ.ஆர்னோல்ட் அரசாங்க அதிபர் க.சண்முகநாதனிடம் கையளித்தார்.

மகஜரைப் பெற்றுக் கொண்ட அரசாங்க அதிபர் தேவையான குறிப்புகளுடன் ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பி வைக்கப்படும் என்றும்- மாணவர்களின் உணர்வுபூர்வமான இந்தப் போராட்டத்துக்கு தாம் ஆதரவு வழங்குவதாகவும் - தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து ஊர்வலத்தில் கலந்து கொண்ட மாணவர்களும் மாணவிகளும் அமைதியாக, தாம் பேரணியாக வந்த வீதிகள் ஊடாக யாழ்.பல்கலைக்கழகத்தைச் சென்றடைந்தனர். மாணவர்கள் திரும்பிச் சென்ற வேளை, வாகனம் ஒன்றில் வந்த சீருடையினர் பரமேஸ்வராச் சந்தியில் வைத்து வீடியோப் படம் மற்றும் புகைப்படம் எடுத்துச் சென்றதைக் காணமுடிந்தது.

(இ-5-6-8-10-15-86-139)

# சுகாதார வைத்திய அதிகாரியை பதவியில் இருந்து நீக்குங்கள்!

## மாநகரசபையின் புளொட் உறுப்பினர்கள் பிரதி மேயருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்,நவ.23

யாழ்.மாநகரசபைக்கு ஒத்துழைப்பு வழங்கி சேவையாற்ற முடியாத யாழ்.சுகாதாரவைத்திய அதிகாரியை சேவையில் இருந்து உடன் நீக்க வேண்டும்.

மேற்கண்டவாறு புளொட் அமைப்பின் ஆறு மாநகரசபை உறுப்பினர்கள் யாழ்.மாநகரசபை பிரதி மேயரைக் கேட்டுள்ளனர்.

இது விடயமாக அந்த அமைப்பின உறுப்பினர்கள் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது:-

யாழ்.மாநகரசபையின் வைத்திய அதிகாரி டாக்டர் தெய்வேந்திரம் சபை உறுப்பினர்களையும், சபையையும் ஏனைய உத்தியோகத்தர்களையும் அவமதித்து கேலி செய்யும் வகையில் 22-11-2000 அன்று பத்திரிகையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

சபையின் மாதாந்த கூட்டங்களுக்கு சமுகம் தர முடியாமைக்கான உண்மைக்காரணங்களை மறைத்து, உண்மைக்குப் புறம்பான காரணங்களைக் காட்டுகின்றார்.

புத்திஜீவி என்றும் ஒரு மக்கள் சேவையாளன் என்றும் தன்னைக் காட்டிக் கொள்ளும் அந்த அதிகாரி மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு சபையையும், உறுப்பினர்களையும் தனது சக உத்தியோகத்தர்களையும் கேலி செய்து கதைப்பது அவருக்கே வெட்கமாகப்படவில்லைப் போலும். ஏனைய உத்தியோகத்தர்களைப் போன்று வைத்திய அதிகாரியும் சுகாதாரக் குழு, மாதாந்தப் பொதுக்கூட்டங்கள் என்பவற்றில் பங்குகொள்ள வேண்டும் என்றே உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

ஒத்துழைப்புத் தந்து கடமை புரியாத ஓர் அதிகாரியை எப்படி சபை ஏற்றுக் கொள்வது? ஒத்துவராத மாட்டினை ஒதுக்கி விடுவதே வண்டிக்கும் நன்மை. இணை மாட்டுக்கும் நன்மை. ஆகவே குறிப்பிட்ட அதிகாரியை உடன் வேலையிலிருந்து நீக்குமாறு கேட்டுள்ளோம் - என்றுள்ளது. (இ-3-7)

## பதில்அமைச்சராக பதவிப் பிரமாணம்

கொழும்பு,நவ.23

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் சீர்திருத்த அமைச்சர் கலாநிதி ரிச்சர்ட் பத்திரன பதில் உயர் கல்வி, தகவல் தொழில்நுட்ப அமைச்சராக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னிலையில் நேற்றுப் பதவிப் பிரமாணம் செய்தார்.

(இ-3-8)

## வார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபடுத்தப்பட்டுவந்த 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் சேவை இடைநிறுத்தப்பட்டிருப்பதை அடுத்து பயணிகள் எதிர்நோக்கும் சிரமங்கள் குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாதுகாப்பு அமைச்சுடனும், சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுடனும் பேச்சு நடத்தினார்.

இந்தப் பேச்சுக்களின் அடிப்படையில் இந்தவார இறுதியில் 'லங்கா முடித்த' கப்பலை சேவையில் ஈடுபடுத்த இணக்கம் காணப்பட்டுள்ளது - என்றுள்ளது.

(இ-7)

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேதினம் கிளாலிப் பகுதியில் படையினருடன் இடம்பெற்ற மோதலின் போது தெய்வானை (சிவராஜா தெய்வானை - கிளிநொச்சி) என்பவரும் -

கடந்த 10ஆம் திகதி அம்பாறை ஒலுவில் பகுதியில் விசேட அதிரடிப் படையினருடன் இடம்பெற்ற மோதலின் போது மேஜர் நவநீதன் (நடராசா தங்கத்துரை - மட்டக்களப்பு) என்பவரும் -

கடந்த 17ஆம் திகதி அம்பாறை மருதமுனைப் பகுதியில் விசேட அதிரடிப்படையினருடன் இடம்பெற்ற மோதலின் போது கப்டன் குணராஜன் (விநாயகம் தேவதாஸன் - மட்டக்களப்பு) என்பவரும்-

கடந்த 19 ஆம் திகதி அரியாலைப் பகுதியில் படையினருடன் ஏற்பட்ட மோதலில் ஆழியரசி (இராசகுலசிங்கம் விஜிதா - யாழ்ப்பாணம்) என்பவரும் - உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-8)


**Model Paper**
(மாதிரி வினாத்தாள்)
O/L 2000 December
பரீட்சைக்குஅமைவானது.
கணிதம் : C.K.B.
விஞ்ஞானம் : திரு.தேவா
அவர்களினதும்
மற்றைய பாடங்களும்
பெற்றுக்கொள்ளலாம்
(80793)
**விக்னா கல்வி நிறுவனம்**
யாழ்ப்பாணம்.



**DCS**
கணனிக் கற்கை நெறிகளுக்கான 2001/2002 கல்வியாண்டுக்குரிய சிறப்பான புலமைப்பரிசில் திட்டத்தை மிக விரைவில் எதிர்பாருங்கள்.....!
(C/13935)



**வெகுமதி ரூபா 10,000/-**
**EBK 2000 SRI RAM HONDA GENERATOR**
(இல. 8166966) களவாடப்பட்டுள்ளது. இதுபற்றி தகவல் தருபவர்களுக்கு அல்லது கண்டுபிடித்துத் தருபவர்களுக்கு வெகுமதி ரூபா 10,000 வழங்கப்படும்.
M. அருளப்பு,
ஏழாலை மத்தி,
ஏழாலை.
(80781)


## மரண அறிவித்தல்

### கனகசபை சண்முகரட்ணம்

உடுவில் கிழக்கு, பெரிய மதவடியைச் சேர்ந்த கனகசபை சண்முகரட்ணம் நேற்று (22.11.2000) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை தம்பதிகளின் புதல்வரும் காலஞ்சென்ற நாகலட்சுமி கந்தையா, காலஞ்சென்ற நவரட்ணம்(பிரதம புகையிரத நிலைய அதிபர்), காலஞ்சென்ற தனலட்சுமி, செல்லத்துரை, அன்னலட்சுமி கந்தசாமி(கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜெயசங்கர்(யாழ்.இந்துக்கல்லூரி), இரட்ணசோதி ஞானேஸ்வரன (ஆசிரியர், இணுவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையும் ஞானேஸ்வரன்(பிரதேச சபை.காங்கேசன்துறை), தர்மேஸ்வரி (பொறுப்பதிகாரி, பிரதம ஆயுள்வேத வைத்தியசாலை-கைதடி) ஆகியோரின் மாமனாரும் நித்தியாவின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2000) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு பெரியமதவடியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரியமதவடி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

தகவல்:
சங்கர் மாஸ்ரர்
(பேரமகன்)

(C/13955)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23. 11. 2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.